Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 29—No. 6

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி ஆனி 1956 ஜூன் | இதழ் 6

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10, மான்டித் ரோட், எழும்பூர், சென்னை-8

ஆண்டுச் சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

சமாஜத்தின் மே மாதக் கூட்டம்

திருநாவலூர்ச் சுந்தரர் செந்தமிழ்க் கழகத்தின் 13ஆம் ஆண்டு நிறைவு விழா, 27, 28—5—56 ஞாயிறு திங்கள் என்னும் இரண்டு நாட்களிலும் சிறப்புற நடைபெற்றது. நமது சமாஜத்தின் துணைத் தலைவர், காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் இரண்டு நாட்களிலும் தலைமை தாங்கினார்கள். திரு. நா. இராமகிருஷ்ணப் பிள்ளை வரவேற்புரை வழங்கினார். தேவகோட்டைச் சைவ சித்தாந்தப் புரவலர், தமிழ்வள்ளல் திரு. உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார், மேலமங்கலம் பாலயோகி இராமதாச சுவாமிகள், பி. வி. இராஜகோபால் பி. ஏ., பி. இ., ஏ. கே. சுப்பிரமணியப் பிள்ளை, டி. ஏ. தாத்தாச்சாரியார் பி. ஏ., பி. எல்., வித்துவான் சோமசங்கரலிங்கம், வித்துவான் வெ. ஜெகந்நாதய்யர் முதலிய சிறந்த அறிஞர்கள் கலந்துகொண்டு அரிய விரிவுரைகளை நிகழ்த்தினர்.

28—5—56ம் நாட் பிற்பகல் நிகழ்ச்சி, நமது சமாஜத்தின் மே மாதக் கூட்டமாக அமைந்தது. திரு. வித்துவான் நடன குஞ்சிதபாதம் பிள்ளை, விருத்தாசலம் அமுத மொழி தி. சொ. சாமிநாதப் பிள்ளை, புலவர் முருகவேள் ஆகிய மூவரும் சொற்பொழிவாற்றினர். இன்னிசையரங்கு ஒன்றும் நன்கினிது நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் தலைவர் அவர்கள் நிகழ்த்திய அரிய இனிய சிறந்த ஆராய்ச்சி முடிவுரைகள், அவையினர் அனைவரையும் மகிழ்விக்கும் தகையவாய் விளங்கின. தலைவரின் அருமை பெருமைகளை அனைவரும் வியந்து பாராட்டி மகிழ்ந்தனர்.

திருநாவலூர் மக்கள் அனைவரும் மிக்க ஒற்றுமையுடன் அன்பும் ஆர்வமும் காட்டி, இரண்டு நாட்களிலும் விழாச் சிறப்பதற்கு எல்லா வகையாலும் உழைத்தனர். விழாவுக்காக வந்திருந்தவர்களுக்கெல்லாம் இரண்டு நாட்களும் அறுசுவை யுண்டி அளிக்கப்பட்டது. மக்கள் திரளாகவும் அமைதியாகவும் முடிவு வரையில் நெடுநேரம் இருந்து விரிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

கழகத்தின் தொடக்க முதலே பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சமாஜத்தின் மாதக் கூட்டங்களை நடத்திக் கொடுத்துவரும் வழக்கம்போல, இவ்வாண்டிலும் சமாஜக்

Regd. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 29 | துன்முகி ஆனி 1956 ஜூன் | இதழ் 6

வைகாசி நிறைமதி

ஆசிரியர்

1. நிறைமதி

பொதுவாக நிறைமதிகள் புனித நாள்களாகக் கொண்டாடப்படும். இரவிலே திங்கள் பதினாறு கலைகளையும் விரித்துக் குளிர்ந்த வெண் கதிர்களை நிலத்தின் மீது வீசுகையில் மக்கள் அளவுக்கு மீறின மகிழ்ச்சி யடைவார்கள். இறைவனுடைய தண்ணருளை அத் திங்களிலே கண்டு போற்றுவார்கள்.

> ' திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
> கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
> வங்கண் உலகளித்த லான் '

என்று இளங்கோவடிகளும் போற்றுகின்றார் அல்லவா? வைகாசித் திங்கள் வேனிற்காலமாகும். பகல் முழுதும் கதிரவனுடைய வெங்கதிர் மக்களை வாட்டி வரும். மாலையில் வெப்பம் குறைந்து இரவில் தண்மைக் காற்று வீசும். அப்போது நிறைமதியும் நேர்ந்து முழுக் கலைகள் ஒளி விடின் நெஞ்சுக்கு மிக மகிழ்ச்சியை உண்டாக்கும் அல்லவா? அதுவே இளவேனில் என்ற பருவத்தின் மாட்சிமை தோற்றுவிக்கும். அதனை வடமொழியார் வசந்தம் என்பர். அப்போது தாவரங்கள் இனிய மலர்களை விரித்து நல்ல மணங்களை வீசும். எறும்பு முதல் யானை ஈறாக

உள்ள அஃறிணை உயிர்கள் பக்குவமடைந்து காதல் கொண்டு உலாவும். ஆறறிவுடைய மாந்தரும் இன்பம் துய்த்துக் களி வாழ்க்கை எய்துவார்கள். குடியானவர்கள் உழவுத் தொழில் முடித்துப் பலன்களை வீடுகளுக்குக் கொணர்ந்து ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். இரவுக் காலங்களில் நல்லமுறையில் பொழுது போக்க ஆடல் பாடல்களை அனுபவிப்பார்கள். சிற்றூர்களில் நாட்டுக் கதைகளைப் பாடச் செய்து களிப்பார்கள். திருவிழாக்களைத் தொடங்கி இறை வழிபாடு செய்வார்கள். இந்த வைகாசித் திங்கள் நிறைமதியில்தான் வசந்தோற்சவம் என்ற திருவிழாவை நடத்தி மகிழ்வார்கள். பெரிய கோயில்களில் வசந்த மண்டபங்கள் கட்டப்பெற்றிருக்கும். அம் மண்டபங்கள் நந்தவனங்களின் இடையே அமைக்கப் பெற்றிருக்கும். நடுமண்டபத்தைச் சுற்றிக் குளிர்ந்த நீர் விட்டுத் தட்பம் சூழச் செய்திருப்பார்கள். இறைவனையும் இறைவியையும் இங்கே எழுந்தருளச் செய்து நறுமண மலர்களால் மண்டபத்தை அலங்கரித்து விழா அயர்வார்கள். இது வசந்த திருவிழா ஆகும். எல்லாப் பெரிய கோயில்களில் இவ் விழா நடத்தினாலும் திருமால் கோயில்களில் மிகச் சிறப்பாக நடத்துவார்கள். சில கோயில்களில் வசந்தோற்சவமும் பிரம்மோற்சவமும் என்ற தேர் விழா அல்லது கல்யாண விழாவும் சேர்ந்து வருவதுண்டு.

மேலும் வைகாசித் திங்களில் நிறைமதி நாள் பல சமயத்தார்களுக்கும் புனித நாள் ஆகும். சைவ வைணவ சமயத்தார்கள் அதனைக் கொண்டாடுவது மட்டும் அல்ல. பிற சமயத்தார்களும் கொண்டாடுகிறார்கள். சைவ வைணவக் கோயில்களில் நடைபெறும் பொது உற்சவங்களேயன்றி வைணவத்தில் நம்மாழ்வார் அவதார நாளாகவும் அது கொண்டாடப்படுகிறது. எல்லாத் திருமால் கோயில்களிலும் இந்தப் பிறப்பு நாள் அல்லது செயந்தி கொண்டாடப்படுகிறது. சிவாலயங்களில் சிறப்பாக முருகக் கடவுள் புனித இடங்களில் அவதார விழாவாக இந்நாள் விளங்குகிறது. இந்நாளில் திருச்செந்திலில் மிகப் பெருமையாக வழிபாடு நடக்கும். இனிப் புற மதமாகிய பௌத்த சமயத்திலும் இந்நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இலங்கையில் இந்நாள் 'பைசாக்' என்ற மரூஉச் சொல்லால்

எடுத்தாளப்படும். புத்தர் 2500 ஆண்டுகளுக்கு முன் அவதரித்தது விசாக சுத்த பௌர்ணமி திதி ஆகும். ஆகவே இந்நாள் மிகப் புனித நாளாக மதிக்கப்படும். இதன் பெருமையை அறிய வேண்டுமானால் இலங்கையில் அனுராத புரம், பொலன்னருவை, கொழும்பு முதலிய இடங்களில் கண்டு மகிழலாம்.

மேலும் பௌத்த சமயத்தில் மற்றொரு அற்புதச் சேர்க்கையும் உண்டு. கௌதம புத்தர் அவதரித்தது மட்டுமேயன்றி அவர் போதி மரத்து நீழலில் திருவருள் பெற்றுப் புத்தராக விளங்கினதும் இதே திதிதான். இனி மூன்றாவதாக இறுதிக் காலத்தில் நிர்வாணம் அடைந்ததும் இதே திதிதான். ஆகவே புத்தருடைய வாழ்க்கையிலே பிறப்பு, திருவருள், மறைவு இம் மூன்றும் ஒரே திதியில் ஏற்பட்டன என்றால் அது ஒரு அற்புதச் சேர்க்கை அல்லவா ? அப்படிப்பட்ட புனித நாள் இந்த வைகாசிப் பௌர்ணமி ஆகும். இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் இமய மலைச் சாரலில் உலும்பினி வனத்தில் புத்தர் தோன்றினார். இந்த அற்புதத் தோற்றத்தை உலகம் முழுதும் இந்த நாளில் கொண்டாடுகிறது. நமது நாடும் கொண்டாடி அவரது வரலாற்றை எல்லாத் தாள்களும் பதித்திருக்கின்றன.

2. அறத்தாறு

25 நூற்றாண்டுகளுக்கு முன்னர் கபிலவாஸ்து என்ற இமயமலைச்சாரலில் அமைந்த ஒரு ஊரில் அந்நாட்டு மன்னனுக்கு மகனாய்த் தோன்றி இளமையிலே இன்ப வாழ்க்கையிலேயே நிறுத்தப்பட்டு, ஒருமுறை பிணி மூப்பு சாக்காடு இவைகளை நேரில் கண்டபோது நெஞ்சழிந்து, இந்த வாழ்க்கையின் நிலையாமை கண்டு வெறுத்துத் துறவி ஆனார். வெகு ஆண்டுகள் துறவறம் பூண்டும் மனம் அமைதியடையாமல் ஊரூராய்ச் சுற்றி ஒருநாள் கயையிற்கருகில் வெள்ளரசின் அடியில் அமர்ந்தபோது திருவருள் பெற்றார். அது அறிவு நிலையாகும். அதுவே புத்த நிலை யென்பர். தான் கண்ட அறநெறியை உலகினர்க்கு வழங்கினார். கணக்கற்ற மக்கள் சீடர்கள் ஆயினர். தன் மனைவியும் மகனும் சொத்துக் கேட்க அவர்களுக்கும் காவி ஈந்தார்.

ஐந்து நெறிகளாகிய பஞ்சசீலங்களைப் போதித்தார். அவைகளே காமம், கொலை, கள், பொய், களவு என்பவைகளை முற்றத் துறத்தல் ஆகும். (மணி—21-57 உரை) எண்பது ஆண்டுகள் வரை மக்களுக்குத் தான் கண்ட கொள்கைகளைக் கூறிப் புத்தம், சங்கம், தருமம் என்ற மூன்று நிலையங்களை நிலைநிறுத்தி இறுதி அடைந்தார். அவ்விறுதி மகா நிர்வாணம் என்று பெயர் பெறும். அவருக்குப் பிறகு அவருடைய சீடர்கள் அவரது கொள்கைகளைப் பரப்பி வந்தார்கள். நாட்டில் எங்கும் அவருடைய போதனை பெருகி அவருடைய சீடர்கள் அதிகரித்து நாளாவட்டத்தில் அவர் உபதேசம் தனிச் சமயமேயாயிற்று. உண்மையில் அவருடைய வாழ்க்கை இந்திய சமயத்தின் ஒரு பகுதியே ஆகும்.

புத்தர் அறநெறி ஒன்றையே புகட்டி வந்தார். அதற்குத் தம்மபதம் (தர்மபதம்) என்று பெயர். அவர் கடவுளைப் பற்றியோ கடவுள் வழிபாட்டைப் பற்றியோ ஒன்றும் கூறவில்லை. அதைப்பற்றி ஒரு குறிப்பும் உண்டு. ஒருநாள் அவருடைய சீடர் ஒருவர் அவரை நோக்கி "பெருந்தகையே, தாங்கள் அரிய கருத்துக்களை எல்லாம் போதித்து வருகின்றீர்கள். அப் போதனைகளைக் கேட்கிறவர்கள் அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆயினும் கடவுளைப்பற்றி தாங்கள் ஒரு சொல்லும் பேசுவதில்லையே? அதன் மர்மம் யாது?" என்று கேட்டான். அதற்குப் புத்தர் விடுத்த விடையாவது. "இந்த மரச் சோலையில் மரங்களைச் சார்ந்திருக்கின்ற இலைகள் அதிகமா, அவைகளிலிருந்து உதிர்ந்து கிடக்கின்ற சருகுகள் அதிகமா" என்று கேட்டார்.

சீடன், "சருகை விடப் பன்மடங்கு மரங்களில் ஒட்டியிருக்கும் இலைகளே அதிகம்" என்றான்.

"அங்ஙனம் நம் வாயிலிருந்து வெளிக் கிளம்பிய கோட்பாடுகள் மிகச் சில. வெளிக் கிளம்பாத கோட்பாடுகளோ எண்ணிக்கை இல்லாதன. அவைகளையெல்லாம் பற்றிப் பேசுவது அவசியமில்லை. நல் வாழ்க்கைக்குத் தேவையான சிலவற்றைப் பற்றிப் பேசினால் போதுமானது. அவைகளைக் கேட்டு நட" என்று புத்தர் விடை அளித்தார்.

ஆகவே கடவுளைப் பற்றிப் புத்தர் பேச வேண்டி நேரிடவே இல்லை. வேண்டுமென்று விட்டாலும் விட்டிருக்கலாம். அக்காலத்துச் சமுதாயக் கேடுகளை எண்ணி, அறத்தாறு மட்டும் வற்புறுத்திப் பேசினர். ஆகவே அவர் அறவாழி யந்தணனாக மட்டும் விளங்கினர்.

3. கருத்து வேற்றுமைகள்

புத்தர் போதனைகளைப் பிற்காலத்தார் மறுத்து எதிர்த்ததற்கு ஒரு காரணம் உண்டு. அதுதான் கடவுளைப் பற்றிக் கூருத எதிர்மறைப் பண்பாடு. அவர் கூறிய உடன்பாட்டுக் கொள்கைகளுக்கு மறுப்புக் கூறுவார் எவரும் இல்லை. அறத்தாறுகளாகிய ஐந்து நெறிகள் (பஞ்சசீலம்) மறுக்கத் தக்கவையல்ல. கடவுளைப் பற்றிக் கவலை கொள்ளாத ஒரு நிலையே அவரை நாத்திகர் ஆக்கிவிட்டது. அது சரியா என்று இக்காலத்தார் கேட்கவேண்டி வரும். ஆரிய சமயங்களில் சாத்திரங்கள் ஆறு என்பர் (சடாங்கம்). அவைகளில் முதல் ஐந்தும் கடவுளைப் பற்றிக் கூறுவதே இல்லை. ஆருவது ஆகியவேதாந்தம் ஒன்றேதான் கடவுளைப்பற்றிக் கூறுகிறது. அப்படி யிருந்தும் ஏன் ஆறு சாத்திரங்களையும் படித்துத் தெரிந்து ஒழுகவேண்டும் என்கிருர்களோ அறியோம்.

பௌத்த சமயமும் அறத்தாறு மட்டும் கூறுகிறது. மற்றப் பகுதியான கடவுள் தன்மை மறுக்கிறதில்லை. இதை ஒட்டித்தான் சைவ சமயாசாரியர்களும் சமணத்தை நிந்தித்தாற்போலப் பௌத்தத்தை அத்தனை அதிகமாக நிந்திக்கவில்லைபோலும். பிற்கால பௌத்த சமயிகள் சடங்குகளை ஏற்றுக்கொண்டு புத்தரின் கொள்கைகளை இழிவுபடுத்தி வந்ததினுல்தான் நாட்டில் பௌத்தம் அழிந்துவிட்டது எனலாம்.

ஆனல் தமிழர் பௌத்தத்தின் மேன்மையான கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அரிய நூல்களையும் அங்கீகரித்துக் கொண்டிருக்கின்ருர்கள் அல்லவா? இல்லாவிடில் மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழியம் என்ற நூல்கள் தமிழில் இருந்திருக்குமா? ஆங்கிலத்திலும் பௌத்த நூல்கள் முழுமையும் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. பௌத்த வாழ்க்கைக் குறிப்புக்கள் அறிவுவழியை மிகப் போதிக்கின்றன. இந்த நிலைமை அறிந்தே நமது

அரசியலார் மதச்சார்பற்ற அரசியலை மேற்கொண்டும் புத்தருடைய 2500-ம் ஆண்டை ஒரு புனித நாளாகக் கொண்டு போற்றி வருகிறார்கள். உலகம் முழுதிலும் இது போற்றப் பட்டும் வருகின்றது. இலங்கை, சீனம், திபேத்து, சியம், கம்போடியா முதலிய பெரும் நாடுகளில் இந்த நாள் ஒரு புனித நாளாகக் கொண்டாடப்படுகின்றது. அறநெறி யாவர்க்கும் வேண்டியதே. அதனைப் போதித்த போதிமாதவனை நினைந்து நம் வாழ்க்கையைப் புனிதப்படுத்துவோமாக.

சேக்கிழாரும், இளங்கோவும்*

புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

முன்னுரை

சேக்கிழாரடிகள் சோழநாட்டின் தலைமை முதலமைச்சராக விளங்கியவர். "முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சர்" என விளங்கி யிருந்த அவர், அமைச்சர்க்குரிய பண்புநலங்கள் பலவும் அமைந்து சிறந்தவர்; "மதிநுட்பம் நூலோடு உடையவர்"; "ஆராய்ந்த கல்வி"ச் செறிவுடையவர்; "நுணங்கிய கேள்வி மேலோர்." எனவே, திருத்தொண்டர் வரலாறுகளையெல்லாம் திறம் தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிய அவர், பழந் தமிழகச் செய்திகளையும், பழந் தமிழ்நூற் பொருள்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து எண்ணிக் கற்றிருந்தாராதல் வேண்டும்! மும்மையால் உலகாண்ட மூர்த்திநாயனர் வரலாற்றுள், மதுரைமா நகரினைப் பற்றிப் பாட வருங்கால்,

"சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும் உள, நோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைத்தேறாய் மதுப்பங்கயம் பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள் மிக்கேறு சங்கம்!"

"மும்மைப் புவனங்களின் மிக்கதன் றே,அம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்

---

* சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்கள் தலைமையில், திருநாவலூரில் நிகழ்ந்த சமாஜ மாதக் கூட்டத்திற் பேசியதனைத் தழுவியது.

செம்மைப் பொருளும் தருவார்திரு ஆல வாயில்,
எம்மைப் பவம்தீர்ப் பவர் சங்கம் இருந்த தென்றால் !"

என்னும் இனிய பாடல்களால், மதுரைமாநகரின்கண் "தமிழ்ச் சங்கம்" அமைந்து விளங்கிய செய்தியினைப் புகழ்ந்து பாடியருளும் சேக்கிழார், சங்கத் தமிழ்நூல்களைத் தம் இளமையிற் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் எனத் துணியலாமன்றோ? சங்கத் தமிழ்நூல்களைச் சேக்கிழார் பெருமான் தமது இளமைப் பருவத்திற் கற்றறிந்து மகிழ்ந் திருப்பார் எனத் துணிந்தனமாயின், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினையும் அவர்கள் கற்று மகிழ்ந்திருப்பார்கள் எனக் கொள்ளத்தடை யுண்டோ? எனவே, சேக்கிழார் பெருமான் இயற்றி யருளிய திருத்தொண்டர் புராணத்தின்கண், இளங்கோவடி கள் பாடியருளிய சிலப்பதிகாரத்தின் சாயல்கள் எங்கேனும் ஒரு சிலவாதல் காணப்படுகின்றனவா என நோக்கி, ஒப் புமையாய்வு (Comparative Study) நிகழ்த்தி, ஒரு சில வற்றைமட்டும் குறிப்பதேஇக்கட்டுரையின் நோக்கமாகும்.

சேக்கிழாரும், இளங்கோவும்

சேக்கிழாரும் இளங்கோவும், "முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்கள்" என்பதில் ஐயமில்லை. சேக்கிழார் சோழ நாட்டின் தலைமை முதலமைச்சர்; இளங்கோ சேரர்குலப் பெருந்தோன்றல். இருவரும் வாழ்க்கை நலங்கள் பலவும் வாய்ப்புற அமைந்து "நிரம்பிய வாழ்க்கை" வாழ்ந்து சிறந்திலங்கியவர்கள். இவ்விருவரும் பலவகையில் தம்முள் உணர்ச்சியொத்த உளத்தினராய்க் காணப்படுகின்றனர். இருவரும் ஐம்புலக் குறும்பறுத்த செம்புலச் செல்வர்கள்; மெய்யுணர்வு மேலோங்கிய சமய வாழ்வின் தலைநின்று மேம்பட்டவர்கள்; "உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல" எனத் தெளிந்து துணிந்தவர்கள்; பிறபுலவர்கள் போலப் பொருளும் புகழும் போகமும் கருதாமல், உலகம் வாழ உயர்ந்த குறிக்கோள் களுக்காகத் தம் நூல்களை இயற்றியவர்கள். புலமைத் துறையிலும் சான்றாண்மை நலங்களிலும், இருவரும் "சரிநிகர் சமானமாக" விளங்குகின்றனர். அரசுரிமை துறந்த இளங்கோவடிகள் குணவாயிற் கோட்டத்திருந்து

சிலப்பதிகாரம் இயற்றினர்; அமைச்சுரிமை துறந்த சேக்கிழாரடிகள் தில்லைத் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தே இருந்து திருத்தொண்டர் புராணம் பாடினர். பற்றற்றுத் தூய துறவுணர்ச்சி மிக்க வாழ்வில் இருவரும் தலைசிறந்து விளங்கினராயினும், நாட்டுப்பற்று மொழிப் பற்று கலையார்வம் என்னும் இன்னோரன்ன நலங்களில், இவர்கள் இருவரும் சிறிதும் குறைவிலா நிறைவுடையராய்த் தமக்கு நிகர் பிறர் எவருமின்றித் திகழ்கின்றனர்! வெறும் கலையறிவுப் புலமைமட்டுமே எய்தி நிற்கும் ஏனையார் சிலர் போல் இன்றி, "காவற் சாகாடு கைத்து" நாடுகாத்தோம்ப வல்ல அரசியல் ஆள்வினைத் திறங்களும் அறிந்து கைவந்த அருமைப் பாடுடையவர்களாக இவ்விருவரும் இலங்கினர். "இன்னிசை கேட்டு நெஞ்சம் இளகிடாதிருப்பான், வஞ்சம் மன்னவர் துரோகம் ஆதி மாபவம் செய்யத் தக்கான்" எனச் செகப்பிரியர் (Shakespeare) புகழ்ந்து பாடும் சிறப்பினதாய்க் கலைகளுள் தலைமைசான்ற இசைக் கலையின்பால், இவ்விருவருக்கும் இருந்த பேரீடுபாடு எல்லையற்றது. சிலப்பதிகாரத்துள் இடையிடையே விரவி வரும் இசைக்கலை பற்றிய நுணுக்கக் குறிப்புகளாலும், இசை நலங் கனிந்து சிறந்த வரிப்பாடற் பகுதிகளாலும், இளங்கோவடிகளின் இசைவிருப்பம் நன்கினிது புலனாகின்றது; அங்ஙனமே, சேக்கிழாரடிகளும் "மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்" இசையில் பெரிதும் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பது,

"வண்டு பாடப் புனற்றடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன,
கொண்ட வாச முகையவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேஅல்ல;
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும், துளித்த கண்ணீர் அரும்புமால்!"

என்பன போல வரும் அவர்தம் அரிய இனிய பெரிய புராணப் பாடல்கள் பலவற்றால், செவ்விதில் தெளிந்துணரப் படுகின்றது.

இவ்வண்ணமே, நல்லிசைக் கவிஞர் அனைவர் மாட்டும் பொதுமைச் சிறப்பியல்பாகக் காணப்பெறும் இயற்கைப் பொருளழகின் ஈடுபாட்டுத் துறையிலும், மரம் செடி கொடி மலர் புள் விலங்கு ஆறு மலை காடு சோலை நாடு நகரம்

என்னும் பலதிறப் பொருள்களின் இயல்புகளை நுனித்துணர்ந்து காண்டலிலும், அவையிற்றின் அழகுகளையெல்லாம் இயல் நெறி திறம்பாமல் தன்மை நவிற்சி அமைய உள்ளவாறு விளக்கிப் பாடுதலிலும், இளங்கோவும் சேக்கிழாரும் பெரிதொத்த நிலையினராய்க் காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தும் பெரியபுராணத்தும் ஆங்காங்கே போதரும் அழகிய இனிய இயற்கைப் புனைவுப் பகுதிகள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். இளங்கோவடிகள் தாம் சேரர் குலத் தோன்றலாயினும், சோழ பாண்டிய வேந்தர்களின் நாடுகளையும், அவர்தம் அறனும் மறனும் ஆற்றலும் பண்பும் விளங்க, நடுநிலை பிறழாது பொதுமையுணர்வு மேலோங்கிய நிலையிற் சேரநாட்டுடன் ஒப்பவைத்துச் சிறந்தெடுத்துப் பாடியருள்கின்றார். அவ்வாறே, சேக்கிழாரும் தாம் சோழ நாட்டின் முதலமைச்சராய்த் திகழ்ந்திருந்தனராயினும், ஏனைப் பிற நாடுகளையும் வேறுபாடின்றித் திறந்தெரிந்து புகழ்ந்து பாடுகின்றார்; அடியவர்கள் அனைவரையும், அவர்கள் எந்நாட்டாராயினும் எக்குலத்தாராயினும், “இவர் தேவர் அவர் தேவர் என்று இரண்டாட்டா தொழிந்து ஈசன்திறமே பேணி” வேறுபாடு சிறிதும் கருதாது, அன்பால் ஒத்த நிலையினராகவே வைத்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப்பரவுகின்றார்! இத்தகைய நடுவுநிலைப் பொதுமை நல்லுணர்வில் இளங்கோவும் சேக்கிழாரும் இணைந்தியைந்து நிகரொத்துத் திகழுகின்றனர். “நெஞ்சை யள்ளும்” திறனில் இளங்கோவின் சிலப்பதிகாரம் போலவே, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும் ஒப்புயர்வற்றுத் தெய்வப் பெற்றிமை மிக்குத் தலைசிறந்து ஒளிர்கின்றது. எளிமை இனிமை தெளிவு முதலிய நலங்கள் அமைந்து, சொற்பொருட் சுவை நலங்கள் மிகுந்து, இழுமெனும் மொழியின் ஒழுகிய நடைத்தாய் விழுமியது பயந்து, கலைத்திறங்கள் பலப்பல செறிந்து, சிலப்பதிகாரமும் பெரியபுராணமும் தமிழ்நாட்டின் இணையற்றுயர்ந்த இலக்கியப் பெருஞ்சுடர் மணிகளாக ஒளி வீசித் திகழ்ந்து வருகின்றன. தமிழ்நாட்டின் பழம்பெருஞ் சிறப்புகளையும் வரலாறுகளையும் பண்பாடுகளையுமெல்லாம், நம்மனோர் தேர்ந்து தெளிந்துணர்ந்து கொள்ளுதற்குச் சிலப்பதிகாரமும் பெரியபுராணமும் போன்ற சிறந்துயர்ந்த

பண்பாட்டிலக்கிய நூல்களே பெரிதும் துணைபுரிந்து உதவி வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டின் தலைசிறந்த பாது காவலர்களுள், சேக்கிழாரும் இளங்கோவும் பெருஞ் சிறப்பிடம் பெறுவதற்குரியவராவர்.

சிலப்பதிகாரமும், திருத்தொண்டர்புராணமும்

இதுகாறும் சேக்கிழார்க்கும் இளங்கோவுக்கும் இடையே காணப்படும் உணர்ச்சியொப்புமைகள் ஒரு சிலவற்றைக் கண்டோம். இனி, அவ்விருவரும் இயற்றி யருளிய சிலப்பதிகாரம் பெரியபுராணம் என்னும் இருபெரு நூல்களினிடையேயும் காணப்படும் ஒப்புமைச் சாயல்கள் சிலவற்றையாதல் ஈண்டுக் காணமுயல்வோம் :—(1) பழந் தமிழ்ச் சோழவேந்தர்கள் இமயம் வரையிற் சென்று புலிக் கொடி பொறித்து மீண்டு வந்த செய்தியைச் சேக்கிழார் தமது நூலின்கண் ஆங்காங்கே பெருமிதந் தோன்றப் பாடு கின்றார். இமயத்தின் சிமயத்திற் சோழர்கள் புலிக்கொடி பொறித்த செய்தியைக் குறித்துப் புகழ்ந்து பாடும் சிலப்பதிகாரப் பகுதிகளை நினைவுகூர்ந்து சான்றாகக் கொண்டே, சேக்கிழார் அங்ஙனம் பெருமிதம் தோன்றப் பாடினார் எனக் கொள்ளுதல் இழுக்காகாது. (2) திருக் குறிப்புத் தொண்டர் வரலாற்றுத் தொடக்கத்தின்கண், "மலைநாட்டு வீரர்கள் மைத்துனக்கேண்மைபேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு" எனச் சேக்கிழார் பாடுவது, "நின்மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா, ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர், இளவரசு பொறாஅர் ஏவல் கேளார், வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின், ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன், பொன்புனை திகிரி ஒருவழிப்படுத்தோய்!" எனவரும் சிலப்பதிகார வஞ்சிக் காண்டப் பகுதியை அடிப்படையாகக் கொண்டே போலும் என எண்ணச் செய்கின்றது. (3) மேலும், ஐந் திணைவளமும் அழகுற விரித்துப் பாடும் அத்திருக் குறிப்புத் தொண்டர் வரலாற்றுப் பகுதியில்,

"கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்தசில் இடங்கள்
நீல வாட்படை நீவிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யும்சொலல் ஆவன உளபரல் முரம்பு"

எனவரும் பெரியபுராணப் பாடல், "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப், பாலை என்பதோர் படிவம் கொள்ளும் காலை..." எனப் போதரும் சிலப்பதிகார வரிகளை நினைவுபடுத்தி நிற்கின்றது.

(4) திருஞான சம்பந்தப் பெருமான் வைப்பூர்த்தாமன் என்னும் வணிகனின் மகள்பால் இரக்கம் கொண்டு, அரவு தீண்டி இறந்த அவள்தன் அருமைக் காதலனைத் திருமருகல் என்னும் சிவதலத்தில் திருப்பதிகம் பாடி உயிர்பெற்றெழச் செய்து காத்தருளிய பெரிய புராண வரலாறு, சிலப்பதிகாரம் வஞ்சின மாலையுள், "நற்பகலே வன்னிமரமும் மடைப்பளியும் சான்றாக முன்னிறுத்திக் காட்டிய மொய் குழலாள்" எனவரும் பத்தினிப் பெண் வேறொருத்தியின் கதைக் குறிப்போடு ஒருபுடையொத்துக் காணப்படுகின்றது. (5) "மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலை...ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?" "அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ தான்?" எனவரும் பெரிய புராணப் பாடல்கள், சேரன் செங்குட்டுவனின் கூற்றாகச் சிலப்பதிகாரத்திற் போதரும் "மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம், பிழையுயிர் எய்திற் பெரும் பேரச்சம், குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பம் அல்லது தொழுதகவு இல்" என்னும் வரிகளின் இனிய எதிரொலியாகவே தோன்றுகின்றன.

(6) கோவலனும் கண்ணகியும் மதுரைமாநகர் நோக்கி நடந்து சென்று கொண்டிருக்குங்கால், தொலைவில் மதுரை நகரினின்று எழும் பலவகைப் புகைகளைக் கண்டனர் என்றும், அருகில் எய்திய வழிப் பலவகை ஒலிகளைக் 'கார்க் கடல் ஒலியிற் கேட்டனர்' என்றும் சிலப்பதிகாரம் பாடுவதைப் படிக்குங்கால்,

"கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ, மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ, யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சோலை தோறும் பிறங்கிய புகையோ, வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும்!"

"காலை எழும்பல் கலையினொலி, களிற்றுக் கன்று வடிக்குமொலி,
சோலை எழுமென் சுரும்பினொலி, தூரகச் செருக்காற் சுலவுமொலி,

பாலை விபஞ்சி பயிலுமொலி, பாடல் ஆடல் முழவினொலி,
வேலை ஒலியை விழுங்கிஎழ விளங்கி ஓங்கும் வியப்பினதால் !"

எனவரும் இனிய பெரிய புராணப் பாடல்கள் நினைவிற் போந்து, கழிபெருங் களிப்பூட்டி மாறிலா மகிழ்ச்சியின் மலர்விக்கின்றன. (7) சண்டேசுர நாயனர் புராணத்துள் சேய்ஞலூர்ச் சிறப்புணர்த்தப் புகும்பொழுது, அவ்வூர்க் கண் வாழும் அந்தணர்களின் இயல்பினை,

"செம்மை வெண்ணீற் றொருமையினர்,இரண்டு பிறப்பின் சிறப்பினர்,
மும்மைத் தழல்ஓம் பியநெறியார், நான்கு வேதம் முறைபயின்றார்,
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார், அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம், எழுலகும் போற்றும் மறையோர் விளங்குவது"

என்னும் பாடலாற் சேக்கிழார் விளக்கியருள்கின்றார். இப் பாடல், சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்துள் 'கட்டுரைக் காதை' என்னும் பகுதியின்கண், மதுராபதித் தெய்வம் கண்ணகிக்குப் பாண்டிய வேந்தரின் பழம் பெருஞ் செங் கோற் பண்பினையெல்லாம் எடுத்துக் கூறி விளக்கி வருங் கால், 'பராசரன்' என்னும் அந்தணன் ஒருவனின் திறம் கூறுகின்றுழி, "ஒன்றுபுரி கொள்கை இரு பிறப்பாளர், முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி, ஐம்பெரு வேள்வி யும் செய்தொழில் ஓம்பும், அறுதொழில் அந்தணர் பெறு முறை வகுக்க, நாவலங் கொண்டு நண்ணார் ஓட்டிப், பார்ப்பன வாகை சூடினன்" எனவரும் அழகிய வரிகளை நினைப்பிக்கின்றமை காணலாம். மேலைப் பெரிய புராணப் பாடலும், இச் சிலப்பதிகார வரிகளும் பெரிதொத்து நின்று, சொற்பொருட் சுவைகள் மிகுந்து திகழ்தல் உணர்ந்து மகிழ்தற் குரியது.

(8) ஆனாயநாயனர், எழுவிரல் இடையிட்ட இன்னிசை வங்கியம் எடுத்து, முத்திரையே முதலனைத்தும் முறைத் தானம் சோதித்து, வக்காணை வழி போக்கி, ஒன்று முதல் படிமுறையாம் ஆரோசை அமரோசைகளின் அமைத்து, முல்லைப்பண் ஆக்கி, எறிய தாரமும் உழையும் கிழமை கொளப், பட்டடைக் குரலாங் கொடிப் பாலையினில் நிறுத்தி, மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறை யால் விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிப், பெரு வண்ணம் இடைவண்ணம் வனப்பு என்னும் வண்ண

இசை வகை யெல்லாம், பாணியும் இயலும் தூக்கும் நடை முதற் கதியில், பண் அமைய எழும் ஓசை எம்மருங்கும் பரப்பித் திருவைந்தெழுத்தினை ஓதி இறைவனை வழிபட்டு மகிழ்ந்த திறம் உணர்த்தும் பெரிய புராணப் பாடல்களின் அரிய நுணுக்கங்கள் பலவும், இளங்கோவடிகள் அருளிச் செய்த சிலப்பதிகார அரங்கேற்று காதையினையும், அதற்கு அடியார்க்கு நல்லார் வகுத்த உரை நலங்களையு மெல்லாம் தழீஇ அமைந்திருத்தல், நம்மனோர்க்கு வியப்பும் உவப்பும் விளைவித்து நிற்கின்றதன்றோ ?

(9) இங்ஙனமே, "கார்காலம் என்னும் அழகிய பருவ நங்கையானவள், மயில்கள் ஏங்கவும் - வண்டுகள் பாடவும், முல்லை மலர்களைப் பற்களாகவும் - சிவந்த தம்பலப் பூச்சிகளைத் தனது இதழ்களாகவும் கொண்டு, மின்னலைப் போன்ற இடையுடன், மாலையணிந்த தன் கொங்கைகள் அசையும்படி, உலகமாகிய நாடகமேடையின்மீது, காண்பவர்களின் கண்ணும் கருத்தும் கவரும் வகையில் நடனம் செய்து காட்டுதற்கு வந்து தோன்றினாள்" என்னும் கருத்தமைய,

"நீலமா மஞ்ஞை ஏங்க, நிரைக்கொடிப் புறவம் பாடக்,
கோலவெண் முகைஎர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட,
ஆலும்மின் இடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்,
ஞாலநீ டரங்கில் ஆடக் கார்எனும் பருவ நல்லாள் !"

என உருவக முறையில், இருபொருள் அமையச் சிறந்த சொல்லோவியமாக வரும் பெரிய புராணப் பாடல், "விரிகதிர் பரப்பி உலகம் முழுதாண்ட, ஒரு தனித் திகிரி ஒருவற் காணேன், அங்கண் வானத் தணிநிலாத் திகழ்தரும் திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல் ? எனத், திசை முகம் பசந்து, செம்மலர்க் கண்கள் முழுநீர் வார முழுமெய்யும் பனித்துத், திரைநீர் ஆடை இருநில மடந்தை அரைசுகெடுத்து அலம்வரும் அல்லற் காலை" எனவரும் சிலப்பதிகார 'அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை' வரிகளை, ஓராற்றால் ஏற்றபெற்றி தழீஇ இயன்றிருத்தல், ஒப்புநோக்கி யுணர்ந்து இன்புறற்பாலதாகும்.

(10) இனி, ஆசிரியர் சேக்கிழார் தமது பெரியபுராணத்தின் தொடக்கத்திலேயே 'திருநகரச் சிறப்பு' என்னும் பகுதி

யின்கண், இயைபின்றாயினும் இயைபுபட வகுத்துக் கொண்டு, மனுநீதிச் சோழனின் வரலாற்றைக் கற்பவர் மனங்கரையவும், சொற்பொருட் சுவைகள் மலியவும், தமது புலமை நலமெலாந் தோன்றவும் நலந்திகழப் பாடியருளி யுள்ளார். சேக்கிழார் பெருந்தகையின் நாட்டுப் பற்றும், ஏனைய பலப்பல நலங்களும் இனையவெனக் காட்டுதற்கு, எழிலினிமை மிக்க இப்பகுதி யொன்றே போதியதாகும். கறவை முறை செய்த காவலனாய மனுவேந்தனைப் பற்றிய மிகப் பழைமையான குறிப்பு, "ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்" எனச் சிலப்பதிகாரத்தின்கண் தான் முதன் முதற் காணப்படுகின்றது. எனவே, சேக்கிழாரடிகள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் செஞ்சொற்சுவை நலங்களின்கண் ஈடுபட்டு மகிழ்ந்ததன் பயனாகவே, மனு வேந்தனின் அரிய வரலாற்றினை அழகிய முறையில் விரிவாகத் தமது நூலுட் சுவைதுளும்பப் பாடினார் எனத் துணிதல் பொருந்துவதேயாம்.

முடிப்புரை

இம்மட்டோ! கோவலனும் கண்ணகியும் மணம் புணர்ந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தியினை இடக்கர் அடக்கித் "தாரும் மாலையும் மயங்கிக் கையற்றனர்" என்று இளங்கோவடிகளும், திருநீலகண்டர் பரத்தைபால் அணைந்து போந்த செய்தியினை "இளமைமீதூர இன்பந் துறையினில் எளியரானார்" எனச் சேக்கிழாரடிகளும் நாகரிக நலந் தோன்றக் கூறியிருக்கும் மாட்சிமையினை என்னென்பேம்! பாண்டியன் உயிர் துறந்ததனையும், அவனுக்கு நேர்ந்த பழிச் சொல்லினையும் "தென்னர் கோமான் தீத்திறம்" என்றும், "செம்மையின் இகந்த சொல்" என்றும் இளங்கோ நுண்ணிதிற் குறிப்பிடுகின்றார். இம் முறைமைக்கு ஏற்பவே, "மன்னிய பாதகனும் நன்கருந்தே ழுற்றுவித்தான்" "தான் நினைந்த அப்பரிசே செய்தான்" எனச் சேக்கிழார் பாடுகின்றார். இவ்வருமைப்பாடு நம் மனத்தை உருக்கி இன்பம் பயக்கின்றதன்றோ? மேலும், பெண்மையழகின் நலங்களைப் பிறரெல்லாம் பாடும் முறைகளுக்கும், இவ்விருவர்கள் பாடும் முறைமைக்கும்தான் எத்துணைப் பெரு வேறு

பாடுளது? தமது உயர்ந்த தவவொழுக்க மேம்பாட்டிற்கும், மிக மேலான சான்ருண்மை நலங்களுக்கும் மாறுபடாத வகையில், தூய்மை யுணர்வே சிறந்து துலங்குமாறு, சேக்கிழாரும் இளங்கோவும் புனைந்து பாடக் காண்கின்ரேம். மாதவியானவள் தன்னை அடிமுதல் முடிகாறும் அழகுபடுத்தி ஒப்பனை செய்துகொண்ட வகைகளை யெல்லாம் வகுத்துக் கூறும் 'கடலாடு காதை'ப் பகுதியும் (75—110), திருஞான சம்பந்தரால் உயிர்பெற்றெழுந்த திருமயிலைப் பூம்பாவை "அழகினுக் கணியாய் நின்ற" தன்மைகளை விதந்து புகழ்ந்து கூறும் (10'5—1109) பெரிய புராணப் பாடல்களும் இவ் வுண்மையை வற்புறுத்துவனவாகும். நாட்டின்கண் ஆட்சியுரிமை பெற்று, மக்கட் சூழலில் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையராய் மிக உயரிய நிலையில் வைகியிருந்தனராயினும், அருமையில் எளிய அழகராய், யாவர்க்கும் கீழாம் ஏழை எளியவர்களோடும் இனிது மிகக் கலந்து பழகி, எவ்வெவர் தன்மையும் செவ்விதிற் றெளிந்த சிறப்பினராய், இளங்கோவும் சேக்கிழாரும் விளங்கி யிருந்தனர். இளங்கோவின் வேட்டுவவரியும் ஆய்ச்சியர் குரவையும், சேக்கிழாரின் கண்ணப்பர் திருநாளைப்போவார் வரலாறுகளும் இவ் வுண்மைக்குச் சான்று பகரும். இளங்கோவடிகளுக்கும் சேக்கிழாரடிகளுக்கும் இடையே இன்னோரனைய பல கருத்தொப்புமைகளும் பண்பொப்புமைகளும் காணப்படுதலை, "ஒப்புமையாய்வு முறை"யினுற் கண்டுணர்ந்து, அவ்விருவர்தம் நூல்களையும் பல்காற் பயின்ருேதிச் செவ்விதிற் சுவைத்து மகிழ்ந்து, நாம் அனைவரும் தமிழ்ச் சைவ நலங்களெலாம் பெற்று நன்கினிது வாழ்ந்துய்வோமாக!

இளங்கோ,நற் சேக்கிழார் என்னும் இருவர்
உளங்கோளும் ஒத்துணர்வும் ஓர்ந்து,—விளங்க
இயன்றவரை கண்டோம்; இருவர்தம் நூலும்
பயின்றினிது வாழ்வோம்,பண் பட்டு!

———

மனக் கோயில்

கோவை ச. கா. சிரங்கம்

"காண்டலே கருத்தாய் நினைந்திருந் தேன்மனம் புகுந்தாய் கழலடி
பூண்டு கொண்டொழிந்தேன் புறம் போயினு லறையோ
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகை மேலெழு கொடி வானிளம்மதி
நீண்டி வந்துலவுந் திருவாரு ரம்மானே"

என்பது அப்பர் திருவாக்கு. ஆகவே காண்டலே கருத்தாய்க் கொண்டவர்களின் மனக் கோயிலில்தான் இறைவன் குடிகொள்வான். அத்தகைய கருத்தையுடையவர்களே உண்மை அடியவர்கள் ஆவார்கள். அல்லாதார் அடியவர்களாவார் என்பது எங்ஙனம் சொல்ல இயலும்? "மனமென்ற கோயிலிலே மாதேவனை நாட்டு" என்ற மொழிக்கிணங்க இறைவனை மனக் கோயிலில் வைத்தே வழிபட வேண்டும். இத்தகைய நிலையில் தொண்டை நாட்டில் திருநின்றவூரில் மறையவர் குலத்தில் பிறந்தவர் ஒருவர். அவர் பெயர் பூசலார் எனப்படுவது. அன்னார் சிவபெருமான் மீதும், அடியவர்கள் மீதும் இடையரு அன்பு உடையவராகத் திகழ்ந்தார். அன்னருக்கு, சிவபெருமான் மேலுள்ள அன்பின் ஆர்வத்தினால் பெருமானுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டுமென்ற அவா உதயமாயிற்று. ஆகவே கோயில் கட்டுவதற்கு நிதி வேண்டுமல்லவா? எங்கும் தேடியும் நிதி கிடைக்கவில்லை. ஆகவே தான் மனத்தினாலேயே ஒரு கோயில் கட்டத் தீர்மானித்தார்.

"மனத்தினாற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்தும் ஓர்பொருட்பே றின்றி என்செய்கேன் என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்"

என்றார் சேக்கிழார்.

சிந்தையினாலேயே நிதியெல்லாம் தேடிக் கொண்டு, நிதி பெற்ற பிறகு கட்டிட வேலையை ஆரம்பிக்கலாமல்லவா? அவைகளையும் மனத்தினாலேயே சமைத்துக் கொண்டார். "சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்

தால் தேடி, கட்டிடம் சமைத்தார். அந்தக் கட்டிடம் இறைவன் எழுந்தருளப் பெறுவதற்குரிய திருக்கோயிலாக அடியார் உள்ளத்தில் பரிணமித்தது. கோயிலின் உள்ளே அழகிய கிணறு, குளம் யாவற்றையும் தனது திருவுள்ளத்திலேயே அமைத்தார்.

திருக்கோயில் செவ்வனே உருப்பெற்று விட்டது. அழகிய கோயில்கண்டு அடியார் உள்ளம் பூரித்தார். இறைவன் எழுந்தருள ஏற்ற கோயில் என்று எண்ணி எண்ணி இறுமாந்தார். ஆகவே கோயிலிலே இறைவனை எழுந்தருளச் செய்யவேண்டுமல்லவா? எல்லா நாட்களிலும் இதைச் செய்ய முடியுமா? நல்ல நாள் குறித்தார். அதாவது தன் உள்ளத்திலேயே அந்த நாளை எண்ணி, இதுதான் நல்லநாள் என்று தீர்மானித்தார்.

தூபியும் நட்டு மிக்க சுதையும்நல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரு நாளில்

காஞ்சிமா நகரத்தில் காடவர் கோமான் (பல்லவர்) என்பவர் அரசராக இருந்தார். சிவ பக்தியில் மிகுந்த நம்பிக்கையுடையவராய்ப் பெருமான்மீது அளவுகடந்த பக்தியிலும் சிறந்து விளங்கினர். அண்டர்பிரான்மீது தாம் கொண்ட அளவில்லாக் காதலினால், சிவபெருமானுக்குத் திருக்கோயில் ஒன்று எழுப்பத் தீர்மானித்தார். அரசரான படியால் ஏராளமான பொருட்செலவில் அப்பனுக்கு அழகான கோயில் கட்டப்பட்டது. கோயில் நல்ல கற்களினாலேயே சமைக்கப்பட்டது. அழகான கோயில் அற்புதமாக நீண்டு நிமிர்ந்து வானை முட்டும் விமானத்துடன் தோற்றமளித்து நின்றது. எண்ணிறந்தோர் வந்து கோயிலைப் பார்த்து அதிசயித்துச் சென்றனர். மன்னனும் மன மகிழ்ச்சியுற்றான். கறைகெழு மிடற்றோனுக்குக் காடவர் கோமானால் கட்டப்பட்ட திருக்கோயில் கண்ணைக் கவர்ந்து விண்ணைத் தொட்டு நின்றது. திருக்கோயிலில் இன்னம்பர் ஈசனை எழுந்தருளச் செய்யவேண்டுமென்று மன்னர் தீர்மானித்தார். அதற்கென நல்ல நாள் பார்த்து முகூர்த்தம் கணித்து ஒரு நாளைத் தீர்மானித்தார். அப்படி மன்னர்

திர்மானித்த நாளும், மனக் கோயிலைக் கட்டி முடித்த நாயனர் திர்மானித்த நாளும் ஒரே நாளாக இருக்கக் கண்டார் சிவபெருமான். ஆகவே அன்று இரவு இறைவன் மன்னரின் கனவில் தோன்றினன். அதனை,

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக்காகப் பெருஞ் செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவி லெய்தி

என்று சேக்கிழார் பாடுகின்றார்.

'நாளை நான் என்னுடைய அன்பன் பூசலார் சமைத்த பொற்கோயிலில் எழுந்தருளப் போகின்றேன். ஆகவே நீ செய்யும் கடவுள் மங்கலத்தினை வேறு ஒரு நாளைக்கு மாற்றிக் கொள்வாயாக."

"நின்ற ஊர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்று நீடா லயத்து நாளைநாம் புகுவோம்; நீஇங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின்கொள்வாய்" என்று [தார்
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்டருளப் போந்

என்று இறைவன் எடுத்து இயம்ப, மன்னர் விழித்து நோக்கி இன்றே 'திருநின்ற ஊர்' சென்று என்னினும் சிறந்த திருக்கோயில் கட்டியுள்ள அடியாரைக் காண வேண்டுமென்று புறப்பட்டார். திருநின்ற ஊரிலே வந்து அங்கு உள்ளவர்களைப் பார்த்துப் பூசலார் அமைத்த கோயில் எங்கு உள்ளது என்று வினவினர். அதற்கு அவர்கள் பூசலார் இங்கு ஒரு கோயிலையும் கட்டவில்லையே! என்று விடை அளித்தார்கள். உடனே மன்னர் அங்குள்ள வேதியர்களை அழைத்துப் பூசலார் யாவர்? அவர் எங்குள்ளார் என்று வினவினர்.

அப்பதி அணைந்து "பூசல் அன்பர் இங்கமைத்த கோயில்
எப்புடையது? என்றங்கண் எய்தினர் தம்மைக் கேட்கச்
'செப்பிய பூசல் கோயில் செய்த தொன்றில்லை" என்றார்
மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருக"

என்றுரைத்தான் வேந்தன் என்று, சேக்கிழார் அன்பு ததும்பப் பாடுகின்றார். வந்த வேதியர்களைப் பார்த்து,

"பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
மாசிலாப் பூசலார் தாம் யார்" என்றார்.

அதற்கு அவர்கள் பூசலார் இங்கு உள்ளவர் தான் என்று, அன்பரை அழைத்து வருகிறோம் என்றார்கள். அதற்கு மன்னர் வேண்டாம் நானே சென்று அவரை வணங்க வேண்டும் என்றானும். மன்னன் அதை,

“ஆசில் வேதியன் இவ்வூரான்”

என்றவர் அழைக்க ஒட்டான் என்கிறார் சேக்கிழார்.

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது “நீர் இங்கு
எண்டிசை யோரும் ஏத்த எடுத்த ஆலயந்தான் யாதிங்கு?
அண்டர் நாயகரைத் தாபித் தருளுநாள் இன்றென்று உம்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுதல் அருள்பெற்று என்றான்

அவ்வாறு சொல்லக் கேட்ட அடியவர் மருண்டு, மன்னரை நோக்கி இறைவன் என்மேல் கருணை கூர்ந்தனன் என்று வியந்து தான் மனத்தினால் கட்டிய கோயிலை மன்னனுக்கு எடுத்துக் கூறினார்.

மன்னவன் உரைப்பக்கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதியிலாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம் என்று சிந்தித்தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்

மன்னன் கேட்டு அதிசயம் எய்தி என்னே அன்பர் பெருமை என்று எண்ணி எண்ணி வியந்து அடியாரைப் போற்றினார். வாயார வாழ்த்தினார். நிலைதடுமாறிப் பக்தியின் உயர்ச்சியை யடைந்தார். அடியாரின் திருப்பாதங்களிலே விழுந்து வணங்கினார். என்னே மனக் கோயிலின் மாண்பு! இத்தகைய நிலையிலே வாழ்ந்த நம் பெருமக்களின் மனத்தை என்னென்று வியப்பது.

அங்கு இங்கென்னாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கப்பெற்ற பரம் பொருள் அடியார்களின் நெஞ்சத்திலே தங்கி உறைந்துவிடுகிறான். ஆகவே இறைவனுக்கு வேண்டுவது அன்பு அல்லவா? அன்பிலே தோய்ந்த இறைவன் அப்பாற் செல்வதில்லை. தன்னை நினைந்து வருந்துகின்ற அன்பர்கள் உள்ளத்தில் அப்பன் எழுந்தருளி விடுகிறான்.

“பத்தியால் ஏத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்”

என்றார் அப்பர் சுவாமிகள். அத்தகைய இறைவனை நாள்தோறும் வணங்கி மனத்திலே மகிழ்ச்சி பொங்க இன்புற்று வாழ்வோமாக.

தந்தையாய்த் தாயுமாகித் தாணியாய்த் தாணியுள்ளார்க்கு
எந்தையு மென்னநின்ற எழுல குடனுமாகி
எந்தை யெம்பிரானே என்றென் றுள்குவார் உள்ளத்தென்றுஞ்
சிந்தையும் சிவமுமாவார் திருப்பயற் றூரனாரே

என்று அப்பர் சுவாமிகள் அழகுற எடுத்தோதுகிறார்.

இச்சரிதை வரலாற்றுப் பகுதியில் சேர்ந்ததென்று ஆராய்ச்சி வல்லவர்கள் கூறுகிறார்கள். பூசலார் நாயனார் மனக்கோயில் எழுப்பிய ஊர் திருநின்ற ஊர். இது தற்போது தின்னனூர் என்று வழங்குகிறது. இது சென்னை நிலயத்திலிருந்து திருவள்ளூர் நிலயத்திற்குப் போகும் பாதையில் உள்ளது. தற்போது உள்ள திருக்கோயில் கருங்கற் பணியாக அமைந்துள்ளது. இறைவன் திருப்பெயர் 'இருதயாலயர்' என்பது. அதன் பொருள் நெஞ்சே கோயிலாகக் கொண்டவர் என்பது. கருவறை யானை முதுகுச் சிற்பம். கல்வெட்டுக்கள் கொண்டது. அண்மையிலே அதனைச்செதுக்கிவிட்டனர். இவ்வூரிலே ஒருபெரிய திருமால் கோயிலும் உண்டு.

இனி நாயனார் காலத்தில் காஞ்சியில் கோயில் கட்டின பல்லவன் இராசசிம்மன் என்பர். அவன் கட்டின கோயில் தற்போது கயிலாயநாதர் கோயில் என்று வழங்கும் இராசசிம்மேசுவரக் கோயில் ஆகும். இது கட்டி முடித்த காலம் கி. பி. 685—705 என்பர். இதனால் பூசலார் நாயனார் காலமும் தெரிகிறது.

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்

பேராசிரியர் - பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்

(மலர் - 29 ; இதழ் - 5 ; 217–ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் சூத்திரம்

"அவையே தானே யாய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே!"

சிவஞான போதத்தின் இவ்விரண்டாம் சூத்திரம், "மேலைச் சூத்திரத்தின்கண் எடுத்துக்கொண்ட சங்கார காரணனாகிய முதல்வன், கலப்பினால் உடலின் உயிர்போல

அவ்வான்மாக்களேயாய்ப், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்ம போதம்போல உடனுமாய் நின்று, ஆணை என்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன்" என்னும் பொருளுடையது. "அவையே தானேயாய்" என்பதனை இரட்டுற மொழிதலால், அவையேயாய்த் - தானேயாய் - அவையே தானேயாய் எனக் கூறிப் பொருளுரைந்துக் கொள்ளுதல் வேண்டும்.

இச்சூத்திரம் மிக விரித்து விளக்குவதற்குரிய பல பொருள்களை உள்ளடக்கிக் கொண்டு நிற்கின்றது. அது பற்றியே சிவஞான முனிவரின் பேருரை, இப்பகுதிக்கு மிக விரிந்து சென்றுளது. இச்சூத்திரத்துள், நிமித்தகாரணனாகிய இறைவனுக்குத் தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பும், அவனது துணைக்காரணமாகிய சத்தியும், வினையும், மாயையும் பற்றி விளக்கப்படுகின்றது. சத்தி இறைவனது குணமும், மாயை அவனது உடைமைப் பொருளுமாம். இருவினையைக் கூறியவாற்றானே, அதன் பற்றுக்கோடாகிய மாயையும் கூறினாராயிற்று. உலகிற்கு மாயை முதற்காரணமும், இறைவன் நிமித்த காரணமும், சத்தி-வினை என்பன துணைக்காரணமும் ஆகும்.

ஐந்தொழில் நடாத்தும் முறையில் இறைவன் உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் முறையினை உணர்த்தப் போந்த பரமாசிரியராகிய மெய்கண்டார், வடமொழி மறைகளில் அதன் பொருட்டு ஆளப்பட்ட அத்துவிதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இதுவாம் என்பதனை இங்கே நிலைநாட்டினார்கள். இதுபற்றியே நம் பரமாசிரியர் 'அத்துவித மெய்கண்டான்' எனப் புகழப்படுவாராயினர். இதனை,

> " பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
> மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ ?"

என நம் தாயுமானவ அடிகள் எடுத்தோதி வழுத்தியருள்வர். இறைவன் ஐந்தொழில் புரிதல் உயிர்களின் பொருட்டே என்றும், உயிர்களோடு கலந்து நின்றே இறைவன் ஐந்

தொழில் புரிகின்றான் என்றும் ஆசிரியர் ஈண்டு விளக்கு கின்றார். இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலையே 'அத்துவிதம்' என்ற சொல்லாற் குறிக்கப்பெற்றது. உயிரானது உடம்போடு கலந்துநின்று எங்ஙனம் அதனை இயக்கு கின்றதோ, அங்ஙனமே இறைவன் உயிர்களோடு கலந்து நின்று ஐந்தொழில் நிகழ்த்துகின்றான். கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாயும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறாயும், உயிர்க் குயிர்தற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனாயும் நிற்கும் இறைவனின் மூவகை நிலைகளும், ஆசிரியரால் தக்க எடுத்துக்காட்டுகளுடன் ஈண்டுத் திறம் பட விளக்கப்பட்டுள்ளன.

சாத்தா கொற்றா என உடம்பிற்கிட்ட பெயரால் ஒருவனைப் பிறர் அழைத்தவழி, அவன் 'என்னை?' என வினவி வந்து நிற்றற்குக் காரணம், அவனது உயிரேயாகும். இங்ஙனம், உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம், உயிரும் உடலும் தம்முள் வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்பதேயாம். இவ்வாறே இறைவனும் உயிர்களோடு வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்கின்றான். உயிரும் உடம்பும் தம்முள் வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்பினும், உயிர் உயிரே ; உடம்பு உடம்பே ; உயிர் உடம்பாகவும், உடம்பு உயிராகவும் திரிபெய்தமாட்டா ; ஆயினும், உயிர் உடம்பாகவும் அதனின் வேறாகவும் நிற்கும் ; உடம்பு அங்ஙனம் நிற்றல் இயலாது. அதுபோல இறைவன் உயிர்களோடு ஒன்றிக் கலந்து நிற்பினும், இறைவனும் உயிரும் ஒன்றாகிவிடுதலில்லை. இறைவன் இறைவனே; உயிர் உயிரே; இறைவன் உயிராகமாட்டான் ; உயிர் இறைவனாதல் இயலாது. ஆயினும் இறைவன் உயிராயும், அதனின் வேறாயும் நிற்பன் ; உயிர் அங்ஙனம் நிற்றல் ஒல்லாது. இறைவன் உயிர்களோடு கலந்து 'அவையேயாய்' நிற்கும் இவ்வியல்பே,

"கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு,உள்ளம்
இட்டதொரு பேர்அழைக்க, 'என்?'என்றாங்கு,—ஒட்டி
அவன்உளம் ஆகில்லான் ; உளம்அவனா மாட்டாது ;
அவன்உளமாய், அல்லனுமாம் அங்கு !"

என ஆசிரியர் மெய்கண்ட தேவரால் திறம்பட அழகுற விளக்கப் பெற்றுள்ளது.

இனி, வடமொழி வேதத்துள் 'அத்துவிதம்' என்றதுவு மன்றி 'ஏகம்' எனவும் ஓதுதலின், அதற்கு மறுதலையாய் உயிர்களோடு கலந்து நிற்பன் எனப் பேதப்படக் கூறுவது என்னை எனச் சிலர் வினவுவர். அவர்க்கு விடைகூறும் முகத்தான் இறைவன் 'தானேயாய்' நிற்கும் நிலையினை,

"ஒன்றென்ற தொன்றேகாண் ! ஒன்றே பதி!பசுவாம்
ஒன்றென்ற நீ, பாசத் தோடுளேகாண் !—ஒன்றின்றால் !
அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்,
இக்கிரமத் தென்னும் இருக்கு !"

என்று, தொல்காப்பியர் முதலிய பண்டைச் சான்றோர் நெறிமுறைக்கியையத் தக்கதோர் எடுத்துக்காட்டால் மிக்க பொருத்தமுற மெய்கண்டதேவர் விளக்கி யருள்கின்றார். வேதம் 'ஏகம்' என்றதற்குப் பொருள், ஒன்று என்பதே யாம்; வேறு பொருள்படாது. அதற்குக் கருத்து பதிப் பொருள் ஒன்றே, இரண்டில்லை என்பது. இதனை யறியாது 'ஒன்று' என்று சொல்லுகின்ற நீ, அப்பதிப் பொருளின் வேறாய பசு என்று அறிவாயாக. பதியும் அறிவுப் பொரு ளாக யானும் அறிவுப் பொருளாக, என்னை மட்டும் 'பசு' என்று கூறுவதெற்றுக்கு? என்று வினவின், நீ மலத்தாற் கட்டுற்று நிற்கின்றாயாகலின் பசு எனப்பட்டனை. அங்ஙன மாயின் 'பிரமம் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை' என்று வரும் வேதமொழியின் கருத்து என்னை யெனின், அகரமாகிய உயிர் எழுத்து இல்லையாயின் ஏனைய பிற எழுத்துக்கள் இல்லை என்பது போலப், பிரமப் பொருள் இல்லையாயின் பிறிதொரு பொருளும் இல்லை என்பதேயாம். இங்ஙனமன்றிப் பிரமத்தின் வேறாக இரண்டாவது பொருள் இல்லை எனக் கொள்ளுதல் பொருந்தாது.

பிற எல்லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் பிரமப் பொருள் இன்றியமையாததாகும் என்பதே அம் மறை மொழியின் தெளிபொருள். இதனை விளக்குதற் பொருட்டு ஆசிரியர் மெய்கண்டார் "அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்" என எடுத்துக் காட்டிய உவமை சாலவும் சிறந்த தொன்றாம். தண்டமிழ் மொழியின் பண்டைப் பெரும்

பேராசிரியராகிய தொல்காப்பியனுர், ‘மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்’ எனக் கூறுதலின், அகரத்தொடு சிவணியன்றி மெய்யெழுத்துக்கள் இயங்காமை பெற்றும். அங்ஙனமே உயிரெழுத்துக்களின் இயக்கத்திற்குங் கூட அகரம் இன்றியமையாததாகும். இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத்திற்குரிய அங்காப்பு முயற்சியோடு சிவணியன்றிப் பிறவாமையானும், எகார ஒகாரம் முதலாயின முன் அகரக்கூறும் பின் இகர உகரக் கூறுகளுமாய் இயைந்தன்றிப் பிறவாமையானும், அவையனைத்தும் அகரமாகிய உயிரை இன்றியமையாமை தெளிவு. எனவே, அகரம் உயிர் எழுத்துக்களினும், மெய்யெழுத்துக்களினும், உயிர் மெய்யெழுத்துக்களினும் கலந்து அவற்றின் தன்மையாகவே நின்று, அவற்றை யெல்லாம் இயக்கி வருதல் பெறப்படும். இவ்வாறே இறைவனும் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் ஏனையவற்றின் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நின்று இயக்கிவருவான் என்பது, தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற தொல் லாசிரியர்களுக்கெல்லாம் கருத்து. ஏனைய எல்லா எழுத்துக்களின் இயக்கத்திற்கும் இன்றியமையாத தொன்றய் அவற்றேடு கலந்து நிற்பினும், அகரம் அவற்றின் வேருகப் பிரிந்து தானேயாகத் தனித்து நிற்கும் இயல்பும் உடையது; அதுபோல ஏனைய எல்லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் இன்றியமையாதகாரணனுய் அவையிற்றேடெல்லாம்கலந்து நிற்பினும், பதிப்பொருளாகிய இறைவன் அவற்றின் வேருகப் பிரிந்து தானேயாகத் தனித்து நிற்கும் இயல்பும் உடையவன். ‘அக்கரங்கள் இன்றும் அகரவுயிர் இன்றேல்’ என்னும் இவ்வுவமையால், ஆசிரியர் மெய்கண்டார் இறைவன் ‘தானேயாய்’ நிற்கும் நிலையினை விளக்கி வலியுறுத்துகின்றார்.

இனி, “அவையே தானேயாதல்” என்னும் உடனிலை ஆசிரியர் விளக்கப்புகுகின்றார். வேதம் ஏகமாய பிரமத்தை ‘ஏகம்’ என்று மட்டும் கூருமல், ‘பிரமம் அத்துவிதம்’ எனவும் ஓரோரிடங்களிற் கூறுதலின், அத்துவிதம் இரு பொருட்கண்ணது என்பார்க்கு, ஏகமாய பிரமத்தை அத்துவிதம் என்றல் பொருந்தாதாய் முடியும் என்பர் சிலர். பண்ணும் அதனின் வேறன்றய்ப் பிரிப்பின்றி எண்ணப்படும் இசையும் போலவும், பழமும் அதனின்

வேறன்றாய்ப் பிரிப்பின்றி எண்ணப்படும் சுவையும் போலவும், எங்கும் பரவியுள்ள இறைவனின் திருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்கும்! பிரமம் அத்துவிதம் என்றது, பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்கும் என்னும் பொருட்டாகலின், அஃது ஏகம் என்பதனோடு முரணுமாறில்லை. பண்ணும் ஓசையும்-பழமும் சுவையும் தம்முள் வேறு வேறேயாயினும், பிரிப்பின்றிக் கலந்து உடனாய் நிற்றல்போல, இறைவனும் உயிரும் தம்முள் வேறு வேறாயினும், இறைவன் உயிர்களின்பாற் கலந்து பிரிப்பின்றி உடனாய் நிற்பன் என்பது ஆசிரியரின் கருத்து. இறைவன் இங்ஙனம் " ஒன்றாய் வேறாய் உடனாய் " நிற்கும் மூவகை நிலைகளையும் மூவகை உவமைகளால் விளக்கிய ஆசிரியர், அநேகாந்தவாதம் என்னும் குற்றம் நிகழாமைப் பொருட்டு, இறைவன் " அரக்கோடு சேர்த்தி அணைந்த அரக்கற்போல் உருக்கி உடங்கியைந்து நின்று பிரிப்பின்றி " உயிர்களின் ஒருங்கு கூடி நின்று நீக்கமின்றி யுடனாதலால், தானேயாய், உலகேயாய், தானே உலகேயாய் இறைவன் விளங்குவான் என ஒருமை முடிபுபட ஒருங்கேயும் உணர்த்தினர்.

இவ்வாற்றால், இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள இயைபைப் பேதம் என்றும், அபேதம் என்றும், பேதாபேதம் என்றும் பிணங்கும் சமயங்களை யெல்லாம் மறுத்து, இறைவன் உயிர்களின்பால் அம்மூவகை இயைபும் ஒருங்கே யுடையன் என்பதனைச் சிவஞானபோதம் தெளிவுபடுத்தி நிறுவியது காணலாம்! இதனையே,

" புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்ப்,
புகல்அளவைக் களவாகிப், பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும், சொற் பொருள்போற்
பேதாபே தமும்இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும்அத் துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம் "

எனச் சிவஞான போதத்தின் புடைநூலாகிய சிவப்பிரகாசம் என்னும் நூல், பிறிதோராற்றால் அழகுற விளக்குகின்றது. 'ஒன்றாய் வேறாய் உடனாய்' நிற்கும் இறைவனின் நிலைகளை

முறையே உடலும் உயிரும், அகரமும் பிற எழுத்துக்களும், பண்ணும் ஓசையும் - பழமும் சுவையும் என்னும் உவமைகளைக்கொண்டு சிவஞானபோதம் விளக்கிற்று; உடலும் உயிரும்போல், கண்ணும் அருக்கனும்போல், கண்ணொளியும் உயிரறிவும்போல் என்னும் உவமைகளைக் கொண்டு சிவப்பிரகாசம் தெளிவுபடுத்துகின்றது.

இங்ஙனம் இறைவன் உயிர்களோடு "ஒன்றுதல்—வேறுதல்—உடனாதல்" என்னும் மூவகையிற் கலந்து நிற்கின்றான் என்பதே உண்மை முடிபாம் என்பது,

"ஈறாய்,முதல் ஒன்றாய்,இரு பெண்ஆண் குணம் மூன்றாய்,
மாறாமறை நான்காய்,வரு பூதம்அவை ஐந்தாய்,
ஆறார்சுவை, ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்,
வேறாய்,உடன் ஆனான்இடம், வீழிம்மிழலையே."

என்னும் திருஞானசம்பந்தர் திருநெறித் தமிழ் மறையால் இனிது விளங்கி வலியுறுகின்றது. இவ்வாறே இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் அத்துவித நிலையை உணர்த்துமாறெழுந்த

"பண்ணையும் ஓசையும் போலப், பழமதுவும்
எண்ணும் சுவையும்போல், எங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவிதம் ஆதல், அருமறைகள் ஒன்றென்னாது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு"

என்னும் மெய்கண்ட சிவத்தின் திருமொழி யுண்மையானது, "குருகாம் வயிரமாம் கூறும் நாளாம், கொள்ளும் கிழமையும் கோளே தானும், பருகா அமுதமாம் பாலின் நெய்யாம், பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்" என்னும் திருநாவுக்கரசர் திருப்பாடலினையும், "பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய்" என்னும் திருநாவலூரர் திருப்பாடலினையும் எத்துணையளவிற் கலந்து ஈடுபட்டு நுகர்ந்ததன் பயனாக எழுந்ததாம் என்பது இனிது உய்த்துணரற்பாலது. — முருகவேள்

(தொடரும்)

—

தூத்துக்குடி, சைவ சித்தாந்த சபையின்
72-ஆம் ஆண்டு விழாத்

தலைமை உரை

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

சைவ சமயம் மிகமிகப் பழமையானதென்று, பற்பல பேரறிஞர்கள் அவ்வப்போது தெரிவித்துள்ளார்கள். ஏனைய சமயங்களின் வரலாற்றில், இந்த நூற்றாண்டில் இன்னரால் இது தோற்றி வைக்கப்பெற்றதெனும் கதையைக் கேட்கிறோம். சைவ சமயத்தைப்பற்றி இம்மாதிரி கதையே கிடையாது. சிவபெருமான் பிறந்த கதை எப்படி இல்லையோ, அப்படியே அவரால் தோற்றி வைக்கப்பட்ட சைவ சமயத்திற்கும் பிறந்த கதை கிடையாது. சிவபெருமானைப்போலவே சைவ சமயமும் தொன்மையாய் என்றும் உள்ளது. இதற்குப் பல புறச்சான்றுகள் உண்டு. அவற்றுள் எல்லோராலும் சில காலமாகக் கையாளப்பெறுவது, மொஹஞ்சோதாரோ, ஹாரப்பாவில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற பல பொருள்களைப்பற்றி நிற்பது. ஏறக்குறைய ஐம்பதாண்டுகட்கு முன் சிந்துநதிக் கரையில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற இப் புதைபொருள்களுள் சிவலிங்கங்களும், அம்மை கூத்தப்பிரான்தென்முகக்கடவுள் முதலியோர்உருவங்களும் கிடைத்தன. இவற்றிலிருந்து இற்றைக்கு 6000 ஆண்டுகட்கு முந்திய காலத்திலேயே பல சைவக் கொள்கைகளும் ஒழுங்கு முறைகளும் நிலவி இருந்தமை ஊகித்தற்கு இடமுண்டு.

அவை :—1. கடவுளைப் பல திருவுருவங்களில் மக்கள் வழிபட்டனர். 2. தங்களிடம் உள்ள துன்பங்களை நீங்கி இன்பம் பெறுதற்கே அவ்வாறு வழிபட்டனர். 3. துன்பங்கள் அத்தகைய வழிபாட்டால் நீங்கும் என்று நம்பினர். 4. அவயவப் பகுப்புடைய கூத்தப்பிரான், தென்முகன், அம்மை முதலிய உருவங்களோடு அவயவப் பகுப்பில்லாமல் கண்ணிற்கு மட்டும் புலனாகும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கங்களும் வழிபாட்டிற்குப் பயன்பட்டன. 5. ஆகையால் கடவுளுக்கு உருவநிலையும், அருவுருவநிலையும் உண்டென்று நம்பினர். 6. இவ்விரு நிலைகட்கு மேற்பட்ட அருவ நிலையும், அதற்கும் மேம்பட்ட நிலையும், கடவுளுக்கு உண்டென்று அக்காலத்திய மக்கள் நம்பியிருத்தல் கூடும்.

7. இவைகளால், இறைவனுடைய பொது சிறப்பு இலக்கணங்களை அவர்கள் அறிந்திருத்தல் கூடும். 8. அம்மை வழிபாடும் ஆண் உருவக் கடவுளர் வழிபாடும் ஒருங்கே காணக் கிடைத்தலின் கடவுளைச் சக்தியாகவும் சக்திமானுகவும் அவர்கள் கருதியிருத்தல் கூடும். 9. சக்திக்கும் சக்தனுக்கும் உள்ள தொடர்பின் நுட்பத்தை அவர்கள் அறிந்திருக்கலாம். 10. புலி மான் முதலிய விலங்குகள் தம்மை மேல் நோக்கி நிற்க, தாம் உட்கார்ந்திருக்கும் திருவுருவம் ஒன்று, கடவுளின் பசுபதிக் கொள்கையின் உருவப்படமேயாகும். 1 . பதுமாசனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பெரியார் உருவம் நடுவிலும், முழந்தாளிட்டு வணங்கும் உருவங்கள் இரண்டு இருபுறமும் காணப்படுவதால், ஒரு குரு சீடர்கட்கு யோக நுட்பங்களைக் காட்டும் முறையும் பெறப்படும். 12. மூக்கு நுனியையே நோக்கியிருக்கும் ஒரு உருவம் அக்காலத்தவருக்கு யோகப்பயிற்சி உண்டென்பதை அறிவிக்கும். 13. உருவ வழிபாடு அருஉருவ வழிபாட்டைப் போலவே, தங்களுடைய துன்பங்களைப் போக்குதற்கு அக்காலத்திய மக்கள் அருவ வழிபாடாகிய யோக நெறியையும் கைக்கொண்டனர் என்று நம்புதற்கிடமுண்டு. 14. சரியை, கிரியை, யோக வழிகட்கு மேலாகிய ஞானமும் அவர்கள் கைக்கொண்டதென்று ஊகிக்கலாம். 15. குருவின் அவசியம், உபதேசம், சீடரின் பக்குவம், தீக்ஷை முதலியனவும், இயல்பாகவே ஊகித்தற்கு உரியன. 16. மறு பிறப்பில் நம்பிக்கை, கன்மமலத்தின் இயல்பு, விடுதலைக்கு வழிகள் முதலியவற்றையும் அவர்கள் அறிந்திருத்தல் கூடும். 17. சிதைந்த நிலையிலேனும், கூத்தப்பிரான் உருவம் காணக் கிடைத்தமையால் கடவுளைக் கூத்தனுகை வணங்குவதின் நுட்பம், அவன் திருக்கூத்து, ஐம்பெருந் தொழில்களை உருவகப்படுத்தி நிற்றல், அவன் நிமித்த காரணனுகை ஐந்தொழில் நடத்துதல் முதலியனவும் அவர்கள் அறிந்த பொருள்களா யிருக்கலாம். 18 இருபதினுயிரம் சதுர அடிப் பரப்பும், பல பெரிய தூண்களை உடைய மண்டபமும், அதன் அருகில் குளமும் காணப்படுதலால், மக்கள் ஒன்று கூடி வழிபடும் நிலையங்களும், அத்தகைய திருக்கோயில் வழிபாட்டுக் கொள்கைகளும் இருந்தமை நன்கு புலப்படும். 19. திருவாசியுடன் சில உருவங்களும், வாகனத்

னைத் தூக்கிச் செல்வது போன்ற அமைப்புகளும் காணப் படுவதால், வழிபாட்டின் அங்கங்களாக விழாக்கள் இருந் தமை அறியலாம். 20. பல இடப உருவங்கள் கிடைத்தமை யால், சைவத்திற்கும் இடபத்திற்கும் உள்ள தொடர்பினை அக்காலத்தவர் அறிந்திருக்கலாம். இவ்வாறே கூர்ந்து ஆராய்ந்து சென்றால், சைவத்தின் அடிப்படையான கொள்கைகளின் மூல வடிவங்கள் எல்லாம் (the formative expression of doctrines) இந்தப் புதை பொருள் களில் உள்ளன என்றே கூறலாம். இவைகளையெல்லாம் ஆதாரங்களாகக் கொண்டே, சர். ஜான் மார்ஷெல் (Sir John Marshall) உலகில் நிலைத்து வழங்கும் சமயங்களில் சைவ சமயம் மிகப் பழமையானது (saivism is the most ancient living religion in the world) என்று வாயாரப் புகழ்ந்து சைவத்தின் தொன்மையை நிலைநாட்டினார்.

மேற்கூறியவற்றை "சிந்து நதிக்கரை நாகரிகச் சின் னங்கள்" எனத் தவறாகக் கூறும் வழக்கம் உண்டு. இந்தியாவின் பற்பல பகுதிகளிலும் இத்தகைய சின்னங்கள் புதை பொருள்களாக அகழ்ந்தெடுக்கப் பெற்றமையால், இந்த நாகரிகம் இந்தியா முழுமையும் பரவி யிருந் தது. ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்குப் பல நூற் றாண்டுகள் முன்பே, இந்த நாகரிகம் பரவி யிருந்தமை யால், இதைத் தமிழர் நாகரிகமே என்று பல பேராசிரி யர்கள் கருதுகின்றனர். டாக்டர் கில்பர்ட் ஸ்லேடரின் (Dr. Gilbert Slater) "Dravidian Element in Indian Culture" எஸ்.வி.விஸ்வநாதாவின் "Racial Synthesis in Hindu Culture" முதலிய பல நூல்களில் இது விளக்கப் படுகின்றது. முத்திரைக் கற்களின் (Seals) சிதைவுகள் பல இப் புதை பொருள்களுள் கிடைத்தன. இவற்றில் பற்பல எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை, ஓவிய எழுத் துக்கள் (Pictograph writing); அது தமிழ் எழுத்துக் களின் மிகப் பழைய வடிவங்கள்; இவற்றிலுள்ள மொழி, தமிழ் மொழியே; இவை கூறும் கருத்துக்கள், தமிழர் நாக ரிகத்தைச் சார்ந்தனவே என்பதை ஹீராஸ் பாதிரியார் (Rev. Father Heras S. J.) தம் ஆராய்ச்சி நூலில் விளக்கி யுள்ளார். இதனால் சைவமும், தமிழர் நாகரிகமும் இந்தியா முழுமையும் பரவியிருந்தமை அறியலாம்.

காஷ்மீரம், பசுபதி நேபாளம், பத்ரி கேதாரம் முதல் கன்யாகுமரி வரையில் எண்ணிறந்த சிவாலயங்கள் இன்றும் காணப்படுகின்றன. பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்களை இந்தியாவின் பரந்த நிலப்பகுதிகளில் காண்கிறோமே அல்லாது, தமிழ் நாட்டின் எல்லைக்குள் இவை அடங்கிவிடவில்லை. கல்கத்தா "வங்கவாசி" பத்திரிகையில் 1919-ல் எழுதப்பெற்ற கட்டுரையில் சில நூற்றாண்டுகட்கு முன்பு இந்தியாவில் 22 கோடி சைவர்கள் இருந்தனரென்று புள்ளி விபரங்களோடு கூறப்பட்டுள்ளது. இந்தியா முழுமையும் சைவம் பரவியிருந்தமைக்குச் சுருதியே சான்று பகர்கின்றது. "திக் பஸ்ம ரஹிதம் பாலம் திக் கிராமம் அசிவாலயம்" (நீறில்லா நெற்றியைக் கொளுத்து, சிவாலயமில்லாக் கிராமத்தைக் கொளுத்து) எனும் வேதவாக்கைக் காண்க. இதனையே அமைதியான முறையில் அப்பர் சுவாமிகள் "திருக்கோவில் இல்லாத திரு இல் ஊரும், திரு வெண்ணீறணியாத திரு இல் ஊரும்........அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே" என்றார்.

இவ்வாறு இந்தியா முழுமையும் பரவியிருந்த சைவ சமயமும், தமிழர் நாகரிகமும், உலகம் முழுமையும் பரவியிருந்தமைக்குச் சான்றுகள் நிரம்ப உண்டு. "சிவநிர்மால்ய ரத்நாகர" முகவுரையில் பாபு பெஸ்ச்சி சின்ஹா (Babu Bechi Sinha) எகிப்து, மெஸபொடேமியா, அராபியா, கிரீஸ், இத்தாலி, இங்கிலாந்து, தென் அமெரிக்கா முதலிய பெருநிலப் பகுதிகளில் பற்பல இடங்களில் இற்றைக்கும் சிவலிங்கங்கள் காணப்படுவதை விளக்குகின்றார். பேபிலோன் நகரத்தில் 16 அடி உயரமுள்ள சிவலிங்கத்தை இன்றும் காணலாம். ஹெட்ரோபோலிஸ் (Hedropolis)-ல் 8 அடி உயரமுள்ள சிவலிங்கம் உள்ளது. மெக்கா, கொரிந்து, கிளாஸ்கோ (Glasgow), பிரேஸில் (Brazil) ஊர்களில் பல சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. எகிப்து தேசத்தில் Memphis-ல் இடபத்தின்மீதுள்ள சிவபெருமான் திருவுருவம், நாகாபரணம், திரிசூலம், புலித்தோல் முதலியவற்றோடு கற்சிலையாகக் காட்சியளிக்கின்றது. இதை அந்த நாட்டு மக்களும் யாத்ரீகர்களும் வில்வம், பால், நிவேதனம் முதலியவற்றோடு இன்றும் வழிபடுகின்றனர். டி. கோபால செட்டியாரவர்கள் எழுதியுள்ள "Saivism the Religion

of the ancient Britons" எனும் நூலில், இங்கிலாந்தின்பல பகுதிகளில் உள்ள சிவலிங்க விவரங்களைக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் கிழக்கேயுள்ள ஜாவா, சியம், கம்போடியா நாடுகளில் சிவாலயங்கள் உள்ள விவரங்களைப் பல் கலைக்கழக ஆசிரியர் பலர், தங்கள் நூல்களில் குறித்துள்ளனர். சியநாட்டு மன்னர்கள் முடிசூட்டு விழாவில், சிவ வழிபாடும் சிவ வேதியர்கள் கலந்து கொள்ளுதலும், தமிழ்ப் பாடல்கள் ஓதப் பெறுதலும் உண்டு. திருவெம்பாவைத் திருநாள், பொன்னூசல் திருநாள், கார்த்திகை விளக்கீடு, சிவராத்திரி முதலிய விழாக்களும் உண்டு. மன்னர் சுபசடங்குகள் பலவற்றில் திருவெம்பாவை ஓதப்பெற்றது. இச்செய்திகளை Qwaritch Wales இயற்றிய "Siamese state ceremonies" நூலிற் காணலாம். இவைகளையெல்லாம் மனத்திற் கொண்டு பார்த்தால், "ஞாலம் நின்புகழே மிக வேண்டும்" என்று திருஞானசம்பந்தப் பெருமானும் "உலகெங்கும் நிரம்பிய சைவம்" என்று சேக்கிழார் பெருமானும், "சைவசமயமே சமயம்.........சேரவாரும் ஜெகத்திரே" என்று தாயுமானப் பெருந்தகையும் கூறுவன, முற்றிலும் உண்மையே தவிர, மிகைபடக் கூறலன்றென நன்கு தெளியலாம்.

வேறு ஒரு வழியிலும் சைவசமயக் கொள்கைகளின் தொன்மையை ஆராயலாம் ஒரு சமயத்தின் தத்துவக் கொள்கைகளை, அதிலுள்ள தோத்திர சாத்திரங்களைக் கொண்டாராய்வது ஒரு முறை. வேற்றுச் சமயக் கொள்கைகள், மறைவாகப் புகுத்தப்பட்டன என்று பிறர் இம் முறைக்கொரு குறை கூறலாம். தத்துவக் கொள்கைகள் புதைபொருட்களஞ்சியங்களாக நின்று, ஆராயும் தோறும் ஒளிகாலும் மிகப்பழைய சிறு சொற்களைக் கொண்டே சமய நுட்பங்களையறிவது மற்றொரு முறை. இந்த முறையில் மேற்கூறிய குறை தலைகாட்டவே இடமில்லை. தமிழ் மொழியிலே மிகப் பழமையான தொல்காப்பியத்திலே, கடவுள், உயிர், உடம்பு எனும் மூன்று சொற்கள் உள்ளன. இம் மூன்று சொற்கள் சைவத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தையும் தம்முள் அடக்கியுள்ளன. கடவுள், கட + உள் எனும் இரண்டு கூறுடைத்து. இவை ஏதோ ஒரு பொருளின் கடந்தநிலை, உள்ளிருக்கும் நிலை ஆகிய இரண்டினையும்

உணர்த்துகிறது. நமது உலக அனுபவத்தில் இவ்வாறு இரு நிலைகளையுடைய ஒரு பொருளைக் காணமுடியாது. எனவே இப்பொருள் உலகானுபவத்தில் ஊனக்கண்கொண்டு காண முடியாத ஒரு அரிய பெரிய பொருளாக இருத்தல் வேண்டும். இவ்வாறே சிந்தனை செய்து ஆராய்ந்து செல்வோமானல், சைவம் கூறுகின்ற பதியிலக்கண நுட்பங்களையெல்லாம் தொகுக்கலாம். உயிர், உய் எனும் வேரிலிருந்து தோன்றி உய்வது, உய்தற்குரியது, கட்டுண்ட நிலையிலிருந்து விடுபடுதலே உய்வு முதலிய பல செம்பொருள்களைத் தந்து சைவசித்தாந்திகள் கூறும் பசுபாச இலக்கணங்கள் நுட்பங்கள் பலவற்றைக் காட்டும். உடம்பு, உடு எனும் வேரில் தோன்றி உடை, உயிருக்கு உடை, உடம்புக்குப் போடப்படுகிற உடைகளைப்போலக் கழன்று மாற்றப்படும் தன்மையது முதலிய பொருள்களைத் தந்து, மறுபிறப்பு, மறு பிறப்பின் காரணமாகிய கன்ம மலம், அதற்குத் துணையாய மாயாமலம், ஆணவமலம் இம்மூன்றிற்கும் உள்ள தொடர்பு முதலிய பற்பல சாத்திரக் கருத்துக்களைக் காட்டும். இவற்றைப்போன்ற மணியான சிலசொற்கள், ஒளி நிரம்பிய பொருட்செறிவுடைய கருத்துக்களைத் தம்முள் அடக்கி நிற்பனவாகப் பிறமொழிகளில் எவையும் காணப்படவில்லை. சைவமும் தமிழும் பிரிக்க முடியாதபடிப் பின்னி நிற்கும் தொன்மையை இவ்வழியாகவும் அறியலாம்.

பழைய பெருமை பேசுவதாற் பயன் என்ன? அன்றைய பெருமை எங்கே? இன்றைய சிறுமை எங்கே? 22 கோடி சைவ மக்களுள் எத்தனை கோடி புறச்சமயங்களுட் புகுந்துவிட்டனர்? எஞ்சிய சிறு எண்ணிக்கையிலும் உண்மையான சைவ ஒழுக்கமும், சீலமும் உடையவர்கள் தொகை எவ்வளவு? புறச்சமயிகள் தொகை பெருகப் பெருக, சைவர்கள் தொகை குறுகக் குறுக அரசியல், வாணிபம், பொருளாதாரம், பொது நலம் முதலிய பல துறைகளில் சைவர்கட்குள்ள வசதிகள் எவ்வகையான மாறுபாட்டை அடைகின்றன? இனியேனும் விழிப்பாயிருந்து நமது தொகையினைப் பெருக்கிக்கொள்ள வேண்டாமா? பெருக்காவிடினும் சுருங்கவிடாமல் பாதுகாக்க வேண்டாமா? சுதந்திர நாட்டில், எந்த இயக்கத்திலும் எண்ணிக்கையின் மிகுதிக்கே மதிப்பு தரப்படுகின்றது.

(தொடரும்)

சிவப்பிரகாசக் கட்டளை*

1. தத்துவ நாமம்

உண்ணிலைக் கருவிகள்

பூதங்கள்: பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக ரு.

ஞானேந்திரியங்கள்: சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்ஙுவை, ஆக்கிராணம் ஆக ரு.

தன்மாத்திரைகள்: சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆக ரு.

கருமேந்திரியங்கள்: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆக ரு.

அந்தக்கரணங்கள்: மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆக ச. ஆக ஆத்மதத்துவம் உச.

இவற்றிற்கு ஆத்மதத்துவம் என்றும், அசுத்ததத்துவம் என்றும், போக்கியகாண்டம் என்றும் பெயர்.

வித்தியாதத்துவங்களாவன: காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை ஆக எ.

இவற்றிற்கு வித்யாதத்துவம் என்றும், சுத்தாசுத்த தத்துவம் என்றும், போகசயித்ருகாண்டம் என்றும் பெயர்.

சிவதத்துவங்களாவன: சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சக்தி, சிவம் ஆக ரு.

இவற்றிற்குச் சிவதத்துவம் என்றும், சுத்ததத்துவம் என்றும், பிரேரகாண்டம் என்றும் பெயர். இவை நசு-ம் உண்ணிலைக் கருவிகள்.

புறநிலைக் கருவிகள்

பிருதுவியின் கூறு: மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக ரு.

அப்புவின் கூறு: ஒடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக ரு.

---

* தருமை ஆதீனத்தின் 1939-ம் ஆண்டுப் பதிப்பு ஒப்புநோக்கப் பட்டது. இதன் முதல் பதிப்பு 1932-ல் வெளிவந்தது.—தி. கி. நா.

நேயுவின் கூறு: ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் ஆ. ரு.

வாயுவின் கூறு: ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆ. ரு.

ஆகாசத்தின் கூறு: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் ஆ. ரு. ஆகப் பூதகாரியம் உரு.

தசவாயுக்கள்: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆ. க0

தசநாடிகள்: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருஷன், குகு, சங்கினி ஆ. க0.

வசனாதிகள்: வசனம், கமனம், தானம், விசர்க்கம் ஆநந்தம் ஆ. ரு.

வாக்குகள்: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆ. ச.

குணங்கள்: சத்துவம், ரஜஸ், தமஸ் ஆ. ௩.

அகங்காரங்கள்: தைசதவகங்காரம், வைகரியகங்காரம், பூதாதியகங்காரம் ஆ. ௩. ஆக தத்துவத் தொண்ணூற்றாறு.

2. தத்துவத் தோற்றமும் ஒடுக்கமும் வருமாறு

பரமசிவனுடைய பராசக்தி யருளினாலே குடிலையிலே நாதம் தோன்றும். நாதத்திலே விந்து தோன்றும். விந்துவிலே சாதாக்கியம் தோன்றும். சாதாக்கியத்திலே மகேசுவரம் தோன்றும். மகேசுவரத்திலே சுத்தவித்தை தோன்றும். இவை ஐந்தினுள் முன் சொன்ன விந்துவிலே நாலு வாக்கும், ஐம்பத்தோரக்ஷரமும், எண்பத்தொரு பதமும், இருநூற்றிருபத்துநான்கு புவனமும், சப்தகோடி மஹாமந்திரமும், சகல சாஸ்திரமும், விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனு கரண புவன போகங்களும், சரியை கிரியை யோகங்களினின்றோர்க்குச் சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளும், பஞ்ச கலைகளும் தோன்றும். இவை சுத்தமாயையின் தோற்றமென்றறிக.

இனி, அனந்ததேவநாயனா ரருளினாலே அசுத்தமாயையிலே நின்று காலமும், நியதியும், கலையும் தோன்றும்.

கலையிலே வித்தை தோன்றும். வித்தையிலே இராகம் தோன்றும்.

இனி, உருத்திரதேவநாயனாருளினாலே முன்சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும். மூலப்பிரகிருதியிலே முக்குணங்களும் தோன்றும். முக்குணங்களும் தோன்றாது நின்றவிடம் அவ்வியக்தம். இந்த அவ்வியக்தத்திலே சித்தமும், புத்தியும் தோன்றும். புத்தியிலே அகங்காரம் தோன்றும். அது யான் எனதென்று விகற்பித்து வரும். அதுவே அகந்தைக்கு வித்தாகும். அது தைசதவகங்காரம் என்றும், வைகரியகங்காரம் என்றும், பூதாதியகங்காரம் என்றும் மூன்று விதமாயிருக்கும்.

தைசதவகங்காரத்திலே, சத்துவகுணத்தினையுடைய மனமும், புத்தியும், இந்திரியங்களென்னும் பெயரையுடைய சுரோத்திராதிகள் ஐந்தும் தோன்றும். வைகரியகங்காரத்திலே, ரஜோகுணத்தினையுடைய கருமேந்திரியங்களாகிய வாக்காதிகள் ஐந்தும் தோன்றும். பூதாதியகங்காரத்திலே, தமோகுணத்தினையுடைய தன்மாத்திரைகளாகிய சப்தாதிகளைந்தும் தோன்றும். சப்தத்திலே ஆகாசம் தோன்றும். பரிசத்திலே வாயு தோன்றும். ரூபத்திலே தேயு தோன்றும். ரசத்திலே அப்பு தோன்றும். கந்தத்திலே பிருதுவி தோன்றும். ஒடுங்குங் காலத்துத் தோன்றின அடைவே யொடுங்கும்.

3. தத்துவ குணங்கள்

பிருதுவி – உரத்துத் தரிக்கும். அப்பு - குளிர்ந்து பதஞ் செய்யும். தேயு - சுட்டொன்றுவிக்கும். வாயு-சலித்தெவையும் திரட்டும். ஆகாசம் - நிரந்தரமாய் இடங் கொடுக்கும்.

சுரோத்திரம்-சப்தத்தை யறியும். துவக்கு-ஸ்பரிசத்தை யறியும். சக்ஷு - ரூபத்தை யறியும். சிங்வை - ரசத்தை யறியும். ஆக்கிராணம் - கந்தத்தை யறியும்.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய ரு-ம் சுரோத்திராதிகளுக்கு விடயமாயிருக்கும்.

வாக்கு-வசனிக்கும். பாதம்-கமனம் பண்ணும். பாணி-இடுதலும் ஏற்றலும் செய்யும். பாயுரு - மலவிசர்க்கத்தைச் செய்யும். உபஸ்தம் - ஆனந்திக்கும்.

மனம் - பற்றும். புத்தி - நிச்சயிக்கும். அகங்காரம் - எழுந்திருக்கும். சித்தம் - சிந்திக்கும்.

காலம் - செல்காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றும். நியதி - கருமத்தை நிச்சயம் பண்ணும். கலை - ஆணவத்தைச் சிறிது நீக்கும். வித்தை - அறிவை யெழுப்பும். இராகம் - பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததிலே யிச்சை யுண்டாக்கும். புருடன் - விடயத்திலே அழுத்துவிக்கும். மாயை - மயக்கும்.

சுத்தவித்தை - ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும். ஈஸ்வரதத்துவம் - ஞானங் குறைந்து கிரியை யேறியிருக்கும். சாதாக்கிய தத்துவம் - ஞானமுங் கிரியையு மொத்திருக்கும். சத்தி தத்துவம் - கிரியையா யிருக்கும். சிவதத்துவம் - ஞானமாயிருக்கும்.

சிவதத்துவம் - சிவனுக்கிடம், நாதமென்று பெயர். சத்திதத்துவம் - காருண்ணியத்துக்கிடம், விந்துவென்று பெயர். சாதாக்கியதத்துவம் - அனுக்கிரகத்துக்கிடம், சதாசிவம் என்றுபெயர். ஈஸ்வரதத்துவம் திரோபவத்துக்கிடம், மகேசுவரம் என்று பெயர். சுத்தவித்தை - சங்காரத்துக்கிடம், உருத்திரம் என்று பெயர்.

4. அவஸ்தை தரிசனம்

இவற்றுடனே கூடிநின்று ஆத்மா புசிக்கும் அவதரத்தினுணர்த்து முறைமை யெங்ஙனமென்னில்?

கீழாலவஸ்தை-ரு, மேலாலவஸ்தை-ரு, சுத்தாவஸ்தை-ரு. இந்தக் கேவலம் சகலம் சுத்தம் மூன்றிற் காரியாவஸ்தை-கரு, காரணாவஸ்தை-ங, ஆக அவஸ்தை-கஅ. இதிற் கீழாலவஸ்தைக்குத் தத்துவம்-ஙரு. மேலாலவஸ்தைக்குத் தத்துவம்: ஙசு. அவை யெப்படியென்னில், கீழாலவஸ்தையாவன - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ரு-க்கு அகக்கருவி முப்பத்தாறில் பூதங்கள் ரு-ம், கலாதிகள் சு-ம், சிவதத்துவம் ரு-ம் ஆகிய கசு-ம் கழித்து மற்றவையுடனே புறக்கருவி சுO-ல் வாயுக்கள் கO-ம், வசனாதிகள் ரு-ம், ஆகிய கரு-ம் கூட்டவேண்டும். இவற்றைக் கூட்டவேண்டுவானேன், அவற்றைக் கழிக்கவேண்டுவானேன் எனில், அவஸ்தைக்கு நிற்கும் கருவிகள் கூட்டப்பட்டு, நில்லாத கருவிகள் கழிக்கப்பட்டன.

ஆத்மா : ஞானேந்திரியங்கள் ரு-ம் கருமேந்திரியங்கள் ரு-ம், தன்மாத்திரைகள் ரு-ம், அந்தக்கரணம் ச-ம், உள்ளம் க-ம், வாயுக்கள் கo-ம், வசனுதிகள் ரு-ம் ஆகிய கூரு கருவிகளுடனே லலாட ஸ்தானத்திலே நின்ற அவதரம் சாக்கிரம்.

ஞானேந்திரியங்கள் ரு-ம், கருமேந்திரியங்கள் ரு-ம் ஆகிய கo-ம் லலாட ஸ்தானத்திலே நிற்க, மற்ற உரு கருவிகளுடனே கண்டஸ்தானத்திலே நின்ற அவதரம். சொப்பனம்.

தன்மாத்திரைகள் ரு-ம் சித்தம் நீங்கலாக அந்தக்கரணங்கள் ங-ம், பிராணவாயு நீங்கலாக வாயுக்கள் கூ-ம், வசனுதிகள் ரு-ம், ஆகிய உஉ கருவிகளும் கண்டஸ்தானத்திலே நிற்க, சித்தமும் பிராணவாயுவும் உள்ளமும் ஆகிய மூன்று கருவிகளுடனே இருதய ஸ்தானத்திலே நின்ற அவதரம் சுழுத்தி.

சித்தமொன்றும் இருதய ஸ்தானத்திலே நிற்க, பிராணவாயுவும் உள்ளமும் ஆகிய இரண்டு கருவிகளுடனே நாபிஸ்தானத்திலே நின்ற அவதரம் துரியம்.

பிராணவாயு வொன்றும் நாபி ஸ்தானத்திலே நிற்க, உள்ள மொன்றுடனே மூலாதாரத்திலே அடங்கின அவதரம் துரியாதிதம்.

இப்படிக் கீழாலவஸ்தையைத் தரிசிக்க. இங்கே உள்ளமென்றது பிரகிருதியை யெனக் கொள்க. இதற்குக் கேவலாவஸ்தை யென்றும் பெயர்.

கேவலாவஸ்தை : இப்படிக் கேவலாவஸ்தையைப் பொருந்தி அதிதப்பட்டுக் கிடக்கும் அவதரத்தில் உணர்த்தும் முறைமை யெங்ஙனமென்னில், விளங்காநின்ற விந்து சத்தி ஆத்மாவுக்குள்ள கருமத்துக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு ஒரு நாதத்தை யுண்டாக்கும்.

சூக்ஷுமை என்னும் வாக்கு அந்த நாதமாகிய அறிவு தானே வடிவாக வரும்.

பைசந்தி என்னும் வாக்கு உந்தி ஸ்தானத்திலே பொருந்தி, வெவ்வேருய் வரும் அக்ஷரங்களினுடைய

சொரூபங்கள் தோன்றும் முறைமை தெரியாதபடி மறைந்திருந்து, மயில் முட்டைக்குள் ஜலமானது புறம்பே மயிலினிறமாய் ரூபிகரிக்கத் தக்கதாயிருந்தும், உள்ளே பஞ்ச வர்னங்களுங்கூடி உருத் தெரியாமல் ஜலமயமாய்த் தோன்றினாற்போல, சித்தத்தினிடத்திலே நினைவு மாத்திரமாய் நிற்கும்.

மத்திமை என்னும் வாக்கு பிராணவாயுவோடுங்கூடி அக்ஷரங்களினுடைய சொரூபங்களை ஒழுங்குபட நிறுத்திச் செவிக்குக் கேளாமல் உள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய்க் கண்ட ஸ்தானத்திலே முற்பட்டு வரும்.

வைகரி என்னும் வாக்கு பிராணவாயுவோடுங் கூடி வந்து உதானவாயுவிலேயும் பந்தித்துச் செவிப்புலனிடத்துக் கேட்கத்தக்கதாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல்லும்.

இங்குச் சொல்லப்பட்ட வாக்குகளுக்கு ஸ்தானமும் வடிவுமாவன: சூக்குமைக்கு: ஸ்தானம் நாபியடியும், வடிவு நாததத்துவமுமாம். பைசந்திக்கு: ஸ்தானம் உந்தியும், வடிவு பிராணவாயுவுமாம். மத்திமைக்கு: ஸ்தானம் நெஞ்சும் கண்டமும், வடிவு பிராண வாயுவுமாம். வைகரிக்கு: ஸ்தானம் நாக்கினடியும், வடிவு பிராணவாயுவும் உதானவாயுவுமாம். இந்த நான்கு வாக்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்ற பஞ்சமை யென்றொரு வாக்குண்டு. அதற்கு ஸ்தானம் மூலாதாரம். அது பிரணவ சொரூபமாயிருக்கும்.

வாக்கு நான்குங் காரியப்படுமுறைமை எங்ஙனமென்னில்:—சிவதத்துவமும் சத்திதத்துவமும் சூக்குமையைக் காரியப்படுத்தும். சாதாக்கியதத்துவம் பைசந்தியைக் காரியப்படுத்தும். ஈஸ்வரதத்துவம் மத்திமையைக் காரியப்படுத்தும். சுத்தவித்தை வைகரியைக் காரியப்படுத்தும்.

இப்படி வாக்கு நான்கினு முணர்த்த உணர்ந்த ஆத்மா சகலாவஸ்தைப்பட்டு வருகிறதெப்படியென்னில்:—கிரியா சத்தி சத்திதத்துவத்தை யெழுப்ப, சத்திதத்துவம் காலத்தையும் நியதியையும் கலையையும் எழுப்ப, கலை ஆணவ

மலத்தைச் சிறிதே நீக்க, ஆத்மா கலையே வடிவாய்த் துரியத்திலே பிராணவாயுவைக் கூடிச் சுழுத்தனுவன்.

இனி, ஞானசத்தி சுத்தவித்தையை யெழுப்ப, சுத்த வித்தை வித்தையை யெழுப்ப, வித்தை ஆன்மாவுக்கு அறிவை யெழுப்பும். இனி இச்சாசத்தி ஈஸ்வரதத்துவத்தை யெழுப்ப, ஈஸ்வரதத்துவம் இராகதத்துவத்தை யெழுப்ப, இராகதத்துவம் ஆத்மாவுக்கு இச்சையை யெழுப்பும். இப்படி ஆத்மா இச்சா ஞானக் கிரியா சொரூபனு யிருக்கும். ஆத்மாவானது காலம், நியதி, கலை, வித்தை, இராகம் இவ்வைந்தையும் தனக்கு உடம்பாகக்கொண்டு, இந்திரியங்களுடனே கூடிச் சத்தாதி விடயங்களைப் புசிக்கவருகிற அவதரத்தைப் புருடதத்துவமென்று சொல்லுவர். ஆதலால், ஆத்மாவுக்குப் பஞ்ச கஞ்சுகன் என்று பெயர்.

இப்படிப் புருடதத்துவமான அவதரத்தில் கிரியாசக்தி சாதாக்கிய தத்துவத்தை யெழுப்ப, சாதாக்கியம் பிரகிருதியை யெழுப்ப, பிரகிருதி குணரூபமாய் ஆத்மாவைக் கூட, ஆத்மா குணமே வடிவாய்ப் போகத்துக் கேதுவான கருவிகளைக் கூடாநிற்கும். இப்படி ஆத்மா கருவிகளைக் கூடிச் சொப்பனஸ்தனுவன். சொப்பனஸ்தனை அவதரத்தி லுணர்த்து முறைமை பதினைந்து பிரகாரமா யிருக்கும். அவை யெங்ஙனமென்னில்:—

அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்னும் தத்துவங்களை அகார, உகார, மகார, விந்து, நாதம் என்னும் அக்ஷரங்கள் எழுப்ப, அந்த அக்ஷரங்களைப் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் என்னும் அதிதேவதைகள் எழுப்ப, ஆத்மா இவையே வடிவாய்ச் சூக்ஷ்மதேகியாய்ச் சாக்கிரத்திற் புசிப்பதுபோல்ச் சொப்பனத்திலும் புசிக்கும்.

இனி இவற்றுடனே சாக்கிரஸ்தனுவன், சாக்கிரஸ்தனை அவதரத்தில் உணர்த்தும் முறைமை யெங்ஙனமென்னில், ஆகாசமிடமாக நின்று சுரோத்திரத்தைப் பொருந்திச் சப்தத்தை யறிந்தால் வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாக நின்று துவக்கினைப் பொருந்திப் பரிசத்தை யறிந்தால் பாதம் கமனிக்கும். அக்கினியினிடமாக நின்று சக்ஷுவைப்

பொருந்தி ரூபத்தை யறிந்தால் பாணி யிடுதலும் ஏற்றலும் செய்யும். அப்புவினிடமாக நின்று சிங்ஙுவையைப் பொருந்தி ரசத்தை யறிந்தால் பாயுரு மலஜலத்தை விடும். பிருதுவியி னிடமாக நின்று ஆக்கிராணத்தைப் பொருந்திக் கந்தத்தை யறிந்தால் உபஸ்தம் ஆனந்திக்கும். இப்படிக் காரியப் படுகிற அவதாத்தில் ஞானசத்தி சிவதத்துவத்தை யெழுப்ப, சிவதத்துவம் மாயையை யெழுப்ப, மாயை குணரூபமாய் நின்று மும்மூன்று ஒன்பது குணங்களாலேயும் பேதிப் பித்துப் பொய்யை மெய்யென்று மயக்கா நிற்கும்.

குணங்களொன்பது: சத்துவத்திலே சத்துவம், சத்து வத்திலே ரஜசு, சத்துவத்திலே தமசு; ரஜசிலே சத்துவம், ரஜசிலே ரஜசு, ரஜசிலே தமசு; தமசிலே சத்துவம், தமசிலே ரஜசு, தமசிலே தமசு என்பனவாம். இவற்றால் ஆத்மா ஜனனமரணப்பட்டு வரும். இதற்குச் சகலா வஸ்தை என்று பெயர். இப்படி மேலாலவஸ்தையைத் தரிசிக்க.

சுத்தாவஸ்தை: கன்மவொப்பும், மலபரிபாகமும் உண் டான அவதாத்திலே ஞானசாரியனாலே ஞான தீபத்தைப் பெற்றுச் சிவனையும், ஆத்மாவையும், பாசத்தையும் உணர்ந்து அருள் பெறும் அவதரம். எங்ஙனமென்னில், பூதங்களைத் தரிசிக்கவே ஸ்தூலதேக மில்லையாம். இந்திரி யங்களைத் தரிசிக்கவே பூதங்களில்லையாம். அந்தக்கரணங் களைத் தரிசிக்கவே இந்திரியங்க ளில்லையாம். கலாதிகளைத் தரிசிக்கவே அந்தக்கரணங்க ளில்லையாம். சுத்த தத்துவங் களைத் தரிசிக்கவே கலாதிக ளில்லையாம். அருளைத் தரிசிக் கவே சுத்த தத்துவங்க ளில்லையாம்.

இது நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என ரு-ஆம்.

நின்மல சாக்கிரம்: பிரபஞ்சம் அநித்தியமெனத் தோன்றி ஆசாரிய ரனுக்கிரகத்தினாலே பற்றுகப் புகுந்து பொறி புலன் மேலிட்ட பசுகரணங்கள் சிவகரணங்களா யிருக்கை.

நின்மல சொப்பனம்: கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றுப் பொருந்துவன மனநிலே கோசரியாமலிருக்கை.

நின்மல சுழுந்தி: இந்தப் பேறு பெற்றேமென்னும் நிராசையினலே பரிணமத்தை யடைகை.

நின்மல துரியம்: தனக்கின்பம் பிறந்த சம்பூரண தசையை யடைகை.

நின்மல துரியாதீதம்: முன்சொல்லப்பட்ட பேறு நான்கு மின்றிப் பேருய் விடுகை. சம்பூரண தசையிலே நீரிலே முழுகினவனைப்போலவும், நிறைய வுண்டவனைப்போலவும், தானன்றிச் சுட்டன்றிச் சொல்லப்படாது. இதற்கு நின்மலாவஸ்தையென்றும் பெயர். இப்படிச் சுத்தாவஸ்தை யைத் தரிசிக்க.

காரணவஸ்தை: காரண கேவலமும், காரண சகலமும், காரண சுத்தமும் என ௩-ஆம்.

காரணகேவலம்: சர்வசங்காரகாலத்து ஆத்மாக்கள் அசுத்த மாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டிகால மளவும் ஆணவமலத்தாலே மறைப்புண்டு ஒன்றுமறியாமற் கிடக்கும் அவதர மெனவறிக.

காரண சகலம்: சிருஷ்டி தொடங்கிச் சர்வசங்காரம் வருமளவும் ஆத்மாக்கள் எண்பத்துநான்கு நூருயிரம் யோனி பேதத்திலும் பிறந்திறந்து திரிகிற அவதரமென வறிக.

காரண சுத்தம்: இங்ஙனங் கேவலசகலப்பட்டுப் பிறந் திறந்து திரியும் அவதரத்து ஆணவமலபாகம் வந்து ஆத் மாக்களுக்கு இருவினையொப்புஞ் சத்திநிபாதமு முண்டான அவதரத்துச் சிவன், ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி இரட்சித்துத் தனது திருவருளாலே ஞானத்தையுங் கடாக்ஷித்துப் பிராரத்தந் தொலைந்த பின்பு தனது பூரண நிலையோடுங் கூட்டிக்கொண்ட அவதரம் எனவறிக.

தசகாரியம்: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி; ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம்.

தத்துவரூபம்: அவற்றின் குணங்களைக் காண்கை.

தத்துவ தரிசனம்: அவை தன்னிடத்திலே நின்று ஜீவித்த முறையைக் காண்கை.

தத்துவசுத்தி: அவை தனக்கு வேறென்றறிந்து நீங்குகை.

ஆத்மரூபம்: ஆத்மஞானமென்னும் அறிவே வடிவென அறிகை.

ஆத்மதரிசனம்: தத்துவங்களை யறிந்து நீங்கி இவற்றினின்று நீங்கின அறிவு நானென அறிகை.

ஆத்மசுத்தி: பந்தமுத்தி யிரண்டிலுஞ் சிவன் உபகரிக்கிறனென்று தன்னுடைய சுதந்தர ஹானியை அறிகை.

சிவரூபம்: தத்துவம் முப்பத்தாறிற்கும் அப்பாலாய், வாக்கு மனாதீதகோசரமாய், ஞானமே வடிவா யிருப்பதென அறிகை.

சிவதரிசனம்: தத்துவம் முப்பத்தாறையும் அறிவித்துத் தரிசிப்பித்து நீங்கி, இவற்றினின்று நீங்கிநிற்கும் ஆத்மாவையுந் தரிசிப்பித்து நிற்கின்ற ஞானமென அறிகை.

சிவயோகம்: இந்த ஞானம் தன்னை விட்டு நீங்காதென்றறிந்து தான் அதுவாய் நிற்கை.

சிவபோகம்: தான் அந்த நேயத்திலே நின்றழுந்திச் சிவத்தைப் பெறுகை.

ஆத்மரூபம்: ஆத்மாவுக்கு ரூபஞ் சொல்லில் ஆத்மா இச்சா ஞானக் கிரியா சொரூபமா யிருக்கும்.

ஆத்மாவுக்கு இச்சை: விஷயங்களிலே சென்று பற்றுதல்.

ஆத்மாவுக்கு ஞானம்: இது இது என்று பகுத்தறிதல்.

ஆத்மாவுக்குக் கிரியை: சர்வத்தையும் தனது விடயமென்று பற்றிநின்று செய்துகொள்ளுதல்.

ஆத்ம தரிசனம்: ஆத்மாவினுடைய இச்சா ஞானக் கிரியையைத் தரிசிக்குமாறு சொல்லில், ஆத்மாவினுடைய இச்சை ஜீவிக்குமிடத்து அந்தக்கரணங்களினிடமாக நின்று ஜீவிக்கும்.

ஆத்மாவினுடைய ஞானம் சிவிக்குமிடத்து ஞானேந் திரியங்களினிடமாக நின்று சிவிக்கும்.

ஆத்மாவினுடைய கிரியை சிவிக்குமிடத்துக் கருமேந் திரியங்களினிடமாக நின்று சிவிக்கும்.

இவைகள் அடுத்ததின் தன்மையாதலினின்றொழிந்து, தத்துவங்களைத் தானன்றென்று கழித்து, அருளே தனுவாகப் பொருந்தித் தத்துவங்களையுந் தன்னையும் அந்த அருளையுந் தரிசிப்பது.

ஆத்மசுத்தி: ஆத்மசுத்தியைச் சொல்லுமிடத்துச் சிவனாலே தான் சர்வத்தையு மறியு முறைமையுங் கண்டு, சிவன் ஆத்மாவுக்கு அறியு முறைமையும் கொடானென்பதுங் கண்டு, சிவனுடைய ஞானசக்தியினாலே தன்னுடைய ஞானம் சிவிக்குமென்றறிந்து, தான் மலமுமாகாமல் சிவமுமாகாமல் நிற்கிறவிடம்.

சிவரூபம்: சிவனுக்கு ரூபஞ் சொல்லில், சிவனும் இச்சா ஞானக் கிரியா சொரூபனா யிருப்பன்.

சிவனுக்கு இச்சை: ஆத்மாக்களை முத்தியிலே யடைவிக்க வேண்டு மென்பதே.

சிவனுக்கு ஞானம்: ஆத்மாக்கள் செய்யப்பட்ட அனாதி கருமங்கள் அனைத்தையும் திருவுளத்து அடைத்திருத்தல்.

சிவனுக்குக் கிரியை: ஆத்மாக்களுக்குக் கன்ம சாமீப்பியம் பிறக்கும்படி அனாதியாய் வரப்பட்ட கருமங்களனைத்தையும் பக்குவாபக்குவம் அறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித் தருளுதல்.

சிவதரிசனம்: தான் கருமம் புசிக்குமிடத்துச் சிவன் தனக்கு மூன்று வகையாக நின்று உபகரிப்பன். அஃதெப்படி யென்னில், அவன்-அவள்-அது முன்னிலையாக நின்று உபகரிப்பன். இப்படி யுபகரிக்குமிடத்துத் தோன்றுகின்ற மூன்று வகையு மொழிந்து, அவையிடமாக நின்று சேஷ்டிப்பித்துத் தான் அக் கருமத்தைப் புசிக்குமிடத்துத் தன்னிடத்து மறைந்து நின்று இந்திரியங்களையுந் தன்னையுஞ்

சேஷ்டிப்பித்துத் தனக்கு அந்தக் கருமம் ருசிக்கும்படி செய்து இடைவிடாமலூட்டுகிற நிவரத்தைப் பார்ப்பது.

சிவயோகம் : அகண்ட பரிபூரணமாகிய சிவத்துள்ளே யழுந்தி, உள்ளும் புறமு மெண்ணுமற் சிவனை உள்ளபடி கண்டு உணர்ந்திருப்பது.

சிவபோகம் : பராசத்தியி னிடமாக நின்று அனுபவத் துடனே கலந்து சிவானுபவம் பிறக்கச் சிவனுடனே, அக்கினிக்கு வெம்மைபோலவும் நீருக்குத் தண்மைபோல வும், இரண்டற அழுந்துவது.

சித்தாந்த தசகாரியக் கட்டளை

சித்தாந்தத்திற்குப் பொருந்துவதாகும் ஆகமத்தினை யுள்ளபடியாய்ச் சித்தாந்த வழியில் விளங்கச் சொல்லப் பட்ட தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி; ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, பர ரூபம், பர தரிசனம், பரயோகம், பரபோகம் என்னும் பத்தவ தரமும் தசகாரியமாம்.

தத்துவ ரூபம் : பிருதிவிமுதல் நாதமீருன முப்பத்தாறு தத்துவங்கள் தனுவும், கரணமும், புவனமும், போகமும், செயலும், பிரேரகமுமாய் நின்ற பெரு வடிவைத் தனக்கு வேருகக் காணும் அவதரம்.

தத்துவ தரிசனம் : பிருதிவிமுதல் நாதமீருன முப்பத் தாறு தத்துவங்களைச் சுத்த மாயா அசுத்த மாயா மலங் களின் காரியமென்றும், சட பதார்த்தங்களென்றும், தன்னலே யறியப்பட்டன வென்றும் தன் அறிவிலே விளங்கக் காணும் அவதரம்.

தத்துவ சுத்தி : பிருதிவிமுதல் நாதமீருன முப்பத்தாறு தத்துவங்களின் விகற்பமாகிய சுட்டறிவுகளிற் ருனில்லா மல், தத்துவங்கள் தன்னைத் தாக்காமல், கானலைத் தண்ணீ ரென்று கண்ட்வுடன் கானலென் றறிந்தவிடத்துத் திரும்ப

விரும்பாததுபோலவும், சொப்பனத்தில் யானையேறி மாலை சூட்டக் கண்டவன் விழித்தவிடத்து அது மெய்யாகக் காணமல் பொய்யாகக் கண்டது போலவும், தன்னறிவிலே கண்டு நீங்கித் தான் அசைவின்றி அன்னியனய் எங்கும் நிறைவாய் நித்தமா யறிவாயுள்ள முறைமையை யறிந்து நின்ற அவதரம்.

ஆன்ம சுத்தி: தேசிகமூர்த்தியினுடைய அனுக்கிரகத் தினல் தன்னையும், தன்னிடத்திலே பந்தமாயிருக்கிற தத்துவ விவகாரங்களையும், எவ்விடத்திலுந் தோன்ருமல் சகசமாய் மறைந்து நின்ற ஆணவ மலத்தினையும் நீங்கித் தானறியு முறைமையும், அவனுடைய ஞானம் அறிவுக்கு அறிவாகி நின்று உபகரிக்கிற முறைமையும், தன் அறிவிலே விளங்கக் காணும் அவதரம்.

ஆன்ம தரிசனம்: ஆன்மாவின் செய்தி யெவ்விடத்திலுந் தோன்ருமல் தத்துவ தாத்துவிகங்களை யெனதென்றும், பசு ஞானத்தினை யானென்றும், நின்ற அசத்திய போதம் நீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப் போதங் கழன்று நின்ற அவதரம்.

ஆன்ம சுத்தி: தனக்கெனச் செய்தி யில்லாத ஆன்மா தன்னுடைய சுட்டறிவு எவ்விடத்திலுந் தோன்ருமற் கெட்டு, தன்னிடத்திலே விளங்கப்பட்ட அனுக்கிரகத் தினலே தற்பூரண மெல்லாம் அடங்கி, தன்னுடைய செய்தி யெல்லாம் அனுக்கிரகத்தினது செய்தியாய்த் தன்னை யந்த ஞானம் அடக்கின முறைமையும், தான் அந்த ஞானத் தினலே யடங்கின முறைமையும், எவ்விடத்திலுந் தோன்ரு மல் பெத்தத்தினலே தேகமே தானயுந் தானே தேகமாகியு நின்ற முறைமைபோல, முதல்வனே தானய் நின்ற அவதரம்.

பர ரூபம்: சடசித்துக்களாகிய தாபரசங்கமங்களு ளெல்லாம் தான் வேறற நின்று பெருமை பொருந்தி யிருக் கப்பட்ட காருண்ணிய சத்தியே தனக்குத் திருமேனியாகி, ஆணவமலஞ் சகசமாயிருக்கப்பட்ட ஆன்மாக்கள் பாக பேதங்களைத் திருவுள்ளத் தடைந்து, தனது இச்சா ஞானக் கிரியையின் செய்தியாகிய மாயா தத்துவங்களினல் சிருட் டித்தும் திதித்தும் சங்கரித்தும் மலபாக வொழிவிலே

யிந்தத் தத்துவங்கள் வேருகும்படிக்குச் சத்திநிபாதத்தை விளைவித்து, சத்திநிபாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத் தோன்ற மானிடச் சட்டை சாத்தி யெழுந்தருளி வந்து, தான் வேறற நிற்கிற முறைமையைத் தருகின்றவன் ஆன்மாக்களுக்கெல்லாம் அறிவிற்கறிவா யிருக்கிற முதல்வனே யென்று, பிரதிக்கினை எது திருட்டாந்தங்களினலே மயக்க விகற்பமறத் தன்னறிவிலே விளங்கக் கண்டு நின்ற அவதரம்.

பர தரிசனம்: ஆன்மாவென்ப தெவ்விடத்திலுந் தோன்ருமல் எனதென்றும் யானென்றும் நின்ற அசத்தியபோதம் நீங்கத் தேசிகமூர்த்தியினுடைய அனுக்கிரகஞானம் பிரகாசித்து நின்ற அவதரம் முதல்வனுடைய பாதம், தன்னை யுணர்த்தும் பகுதியாகத் தாக்குவதான விடய போகங்களை அவன் அவள் அதுவாய் நோக்குமிடமெல்லாம் அவனுடைய அனுக்கிரகத்தையே கண்டு அனுபவிக்கும் அவதரம் முதல்வனுடைய திருமுகம், அந்த அனுக்கிரகத்திலே தற்செயல் தோன்ருமல் பரவசப்படும் அவதாம் முதல்வனுடைய திருமுடியாம் என்றறிந்து, இந்த வுண்மையினைச் சந்தேக விகற்பமற வுள்ளபடி விசாரித்துத் தேர்ந்து, இதுவல்லாமற் சத்தியமா யுள்ளபொருள் வேறேயு மொன்றில்லை யென்று தெளிந்து, எனது யான் என்னும் விகற்பமாகிய பிருதிவி முதல் நாதமீருகச் சொல்லப்பட்ட சகலாவத்தையிலும் பொருந்தாமல் இந்தக் கருவிகள் நீங்கினல் தனக்குள்ள சகசநிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தாமல், இந்தக் கேவல சகல மிரண்டும் நீங்கினவிடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம்பிரம ஞானத்திலும் பொருந்தாமல், தேசிக மூர்த்தியினுடைய செய்தியாய் அறிதற்கரிதாகிய மேலான பூரணவின்பந் தோன்ருமல் ஏகதேச வியாபாரமாகிய தனுகரணுதி யின்பமே தோன்ற, அந்த இன்பங்களையே மெய்யென் றனுபவித்து நின்ற முறைமைபோலத் தனுகரணுதி யின்ப மெவ்விடத்திலும் தோன்ருமல் பூரணவின்பத் தொடர்ச்சியாகிய தேசிக மூர்த்தத்தினனுக்கிரக ஞானத்தினை யெவ்விடத்திலுங் கண்டனுபவிக்கும் அவதரம்.

பர யோகம்: சட சித்துக்களிரண்டினும் நின்று விளங்குவதாகிய இதாகிதங்களுக்கேற்ற சத்தாதி விடயங்களிலே

யெந்த விடயங்கள் வந்து தாக்கினாலும், அந்த விடயங்களை யெதிரிட்டுப் பார்த்து, இவை மாயா காரியமான தனு கரண புவன போகங்களினுடைய விகற்பமென்றும், இந்த விடயங்களினின்றும் விளங்குவதாகிய இதாகிதங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங் கண்டு, தனக்கெனச் சற்றுஞ் செய்தி யில்லாத சடரூப மாகையினாலே தானாகச் செய்திட அறியாது, அந்த விடயங்களை யதுவதுவாகப் புசிக்கும் ஆன்மாவை நித்தியனாய்ப்பூரணனா யறிவாயிருந்தாலும் தானாக வொன்றையு மறிதற்கு அறிவில்லை யென்னும் முறைமையை யுள்ளபடி தரிசித்து, அந்த அருளினது நிறைவெல்லாந் தனது வடிவாகவுடைய பூரணவின்பமெனக் கண்டித்துக் குருமூர்த்தமா யெழுந்தருளி மானிடச்சட்டை தரித்து வந்து உபதேசித்த அனுக்கிரகத்தை யுள்ளபடி தரிசித்து, இவ்விடத்திலே வந்து பொருந்தப்பட்ட சத்தாதி விடயங்களை யெல்லாம் அந்த அனுக்கிரகத்தினாலே பொருந்திப் பார்த்து, இந்த விடய போகங்களின் வழித்தாய்த் தீவினையைச் செய்விக்கிறதும் அனுக்கிரகமாகிய திருவருள் தானே, இந்த நன்மை தீமைகளை யறியும்படிக்குப் புசிப்பாகி வந்த விடயபேதங்களுக்கும் அவ்வனுக்கிரகமாகிய அருள் தானே யென்று உள்ளபடி தரிசித்து, இந்த முறைமையே யன்றிச் சித்தாகிய ஆன்மவர்க்கத்திற்கும் சடமாகிய பாச சாலங்களுக்கும் ஒன்றையொன் றறியவும், ஒன்றையொன்று பொருந்தவும், ஒரு சற்றுஞ் செயலில்லை யென்னும் முறைமையை யுள்ளபடி தரிசித்து அந்தப் பொருளோ டிசைவதாகிய அவதரம்.

பா போகம்: எத்தகைய தொழில்களைச் செய்தாலும் தற்செயலெவ்விடத்திலுந் தோன்றும லனுக்கிரகமாகிய அருள் நிறைவிலே வேறற நிற்கில் அந்த அருளுக்கு முதன்மையாகிய நேயம் அவனதறிவு பூரண மெல்லாம் தனது வடிவாகக்கொண்டு, தான் அந்த அறிவு பூரணத்திற் கெல்லாமுயிராய் இவனதறிவு தொழிலாகிய இந்திரிய போகங்களாய் வரும் புசிப்புந் தொழிலுந் தனது புசிப்புந் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும் நானாவிதமாகிய போகங்களை யெல்லாம் இவனுக்குத் தனது பூரண வின்பமாகிய நேய வடிவாகவே காட்டி, இவனதறிவு பூரண மெல்லாந் தனது இன்பப் பூரணமாகவும், தனது இன்பப்

பூரணமெல்லாம் இவனது அறிவு பூரணமாகவும் வேறறத் தோன்றி நின்று, தனது இன்ப நிறைவெல்லாம் இவனது அனுபோக பூரணத்தை யமிழ்த்தி நிற்கும் அவதரம்.

தசகாரிய சங்கிரகம்

தத்துவ ரூபம்: முப்பத்தாறு தத்துவங்களையுடைய தொழிலைத் தனக்கு வேறு யறிதல்.

தத்துவ தரிசனம்: தத்துவங்களைச் சடமென் றறிதல்.

தத்துவ சுத்தி: அவைகளைச் சிவஞானத்தினாலே தனக்கு அன்னிய மென்றறிதல்.

ஆத்தும ரூபம்: பஞ்சமலங்களினின்று நீங்கி ஆத்மஞான மென்னும் அறிவே வடிவென அறிதல்.

ஆத்தும தரிசனம்: தனக்கொரு செய்தியு மில்லையென் றறிந்து நிற்றல்.

ஆத்தும சுத்தி: பெத்தத்தினும், முத்தியினுஞ் சிவன் உபகரிக்கிறானென்று தன்னுடைய சுதந்தர ஆனியை யறிந்து சிவஞானத்திலே யழுந்தல்.

சிவ ரூபம்: ஆணவ மலத்திலே கிடக்கிற ஆன்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களை நீக்கி மோட்சத்திலே விடுவனென்று திடமாயறிதல்.

சிவ தரிசனம்: சிவன் செய்யும் பஞ்சகிருத்தியத்தை ஆன்மா செய்யானென் றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்ற ஞானம்.

சிவ யோகம்: சிவசத்தி செய்யும் கிருத்திய மெல்லாம் சிவனுக்குச் சற்றுமில்லை யென்றறிந்து, சிவசத்தியை யன்றித் தனக்கும் பிறருக்குஞ் சற்றுஞ் செய்தி யில்லை யென்று தெரிந்து திருவருளோ டழுந்தல்.

சிவ போகம்: சிவத்தோ டிரண்டறச் சிவானந்தத்தைப் புசித்து வருதல்.

தின் மேமாதக் கூட்டத்தினை நடத்திக் கொடுத்தமைக்காகச், சுந்தரர் செந்தமிழ்க் கழகத்தினர்க்குச் சமாஜச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் புதல்வர் திரு. டி. என். இராதாகிருஷ்ணன் அவர்கள், தமது தந்தையாரின் சார்பில் நன்றியுரை நவின்றார்.

கழகச் செயலாளர் திரு. தி. ரா. பக்தவத்சலம் அவர்கள், திருநாவலூர்த் திருக்கோயில் திருப்பணி குறித்தும், அதற்காக ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்து ஊக்கத்துடன் செய்ய வேண்டிய முயற்சிகளைப் பற்றியும் வற்புறுத்திப் பேசி, அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இரவு 10½ மணிக்குமேல் வாழ்த்துரையுடன் விழா இனிது நிறைவேறியது. (உ. பர்.)

நிகழ்ந்தவை

24—5—56 : புத்தர் ஜயந்தி-எல்லா ஊர்களிலும் கொண்டாடப்பட்டது. சிறப்பாகக் கோவை! மணி கல்வி நிலையத்தில் 'போதி மாதவன்' என்ற தலைப்பில் கி. வா. ஜகந்நாதன் எம். ஏ. அவர்கள் பேசினார்.

25, 27—5—56 : திருவள்ளுவர் கழகம் 29-வது திருக்குறள் விழா, தென்காசி. பல பெரியார்கள் பேசினார்கள்.

26, 27—5—56 : அடியார் மன்றம், சென்னை. திருஞானசம்பந்தர் திருநாளும், குமரகுருபர சுவாமிகள் திருநாளும் கொண்டாடப்பட்டன.

27—5—56 : நன்னெறி மன்றம், நாகர்கோயில். குமார கோயிலில் சம்பந்தர் குருபூஜையும் 3-வது அத்தர் யோகமும் நடைபெற்றன.

26, 30—5—56 : கீரனூர் சன்மார்க்க குருகுலம் 6-ம் ஆண்டு துவக்க விழா. பல பெரியார்கள் பேச்சுக்கள் நிகழ்ந்தன.

30 to 5—5—56 : மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா. இயல் இசை நாடகம் மூன்றின் நிகழ்ச்சிகள் நாள் தோறும் நடைபெற்றன. பொன் மலர் வெளியிடப்பட்டது. சிறப்புப் பேச்சுக்கள் நிகழ்ந்தன.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by C M Ramachandran Chettiar, B .A, .B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 10, Monteeth Road, Egmore, Madras-8